Registered as a NewsPaper

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆடி-30 | 15-08-2005 | திங்கட்கிழமை | ஓசை-179



கணேசா
நகையகம்
தங்கநகை உலகில்
தமக்கென தனியிடம்
பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி,
வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-12425)

# மக்கள், புலிகள் போக்குவரத்திற்கு ஓமந்தைச் சாவடியில் இடையூறு!

## சிலமணிநேரம் சாவடி மூடப்பட்டது புலிகள் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டனர்

(வவுனியா)

**ஓமந்தை இராணுவ சோதனைச்சாவடியூடாக பொதுமக்களும், தமிழீழ விடுதலைப்புலிகளும் பயணம் செய்வதற்கு நேற்று சிறிலங்கா படையினரால் இடையூறு ஏற்படுத்தப்பட்டது. முற்பகல் சோதனைச்சாவடி சில மணிநேரம் பூட்டப்பட்டு போக்குவரத்து முடக்கப்பட்டது . இதேவேளை வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம் உட்பட கிளிநொச்சிக்கு வரவிருந்த போராளிகள் இராணுவத்தினரால் திருப்பி அனுப்பப்பட்டனர்.**

ஏ-9 வீதியில் ஓமந்தை வழியான பாதை நேற்று மீண்டும் சில மணித்தியாலங்களுக்கு இராணுவத்தினரால் முடக்கப்பட்டுள்ளது.

முற்பகல் பத்து மணியில் இருந்து 12.25 வரை இந்தப்பாதை மூடப்பட்டது.

இதன் காரணமாக தென்னிலங்கையில் இருந்து வந்த பயணிகள் பெரும் சிரமங்களுக்குள் உள்ளாகினர். புளியங்குளம் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகள் வீதியினை மூடி இருப்பதன் காரணமாகவே தாம் வீதியை மூடியதாக படையினர் இதற்கு காரணம் தெரிவித்திருந்தனர். எனினும் அவ்வாறு புளியங்குளம் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் வீதியை மூடவில்லை என்றும் இது

(12ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே அமைச்சர்கள்-பாலசிங்கம் லண்டனில் நேற்றுச் சந்திப்பு

(லண்டன்)

நோர்வே நாட்டின் வெளியுறவு அமைச்சர் ஜோன் பீற்றர்சன் மற்றும் துணை அமைச்சர் விதார் ஹெல்கேசன் ஆகியோர் லண்டனில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்துப் பேசவிருந்தனர். இன்று நடைபெறஉள்ள அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் இறுதிக்கிரியைகளில் பங்கேற்பதற்காக அவர்கள் இருவரும் இலங்கை வரும் வழியிலேயே இந்தச் சந்திப்பு நடைபெறவிருந்தது. நோர்வே அமைச்சரும் பிரதியமைச்சரும் நாளை வரை இலங்கையில் தங்கியிருந்து அரசாங்கத்தரப்பினருடன் பேச்சு நடத்துவர் என நோர்வே வெளியுறவு அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை இலங்கைக்குச் செல்லும் தமது பிரஜைகளுக்கு பயண எச்சரிக்கையை நோர்வே நேற்று முன்தினம் விடுத்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (32)

## புலிகள் மீதான தாக்குதல்களால் போர்நிறுத்தம் கேள்விக்குறியாகும்

(மட்டக்களப்பு) ——— இளந்திரையன்

தமிழீழ விடுதலைப் புலிகளின் அலுவலகங்கள் மீது சிறிலங்காப் படையினரும், அதன் துணைப்படையினரும் மேற்கொண்டு வரும் தாக்குதல்களை அடுத்து மக்கள் மத்தியில் சமாதானம் தொடர்பான கேள்விகள் அதிகரித்துள்ளன. இந்த நிலைமைகள் தொடருமானால் போர்நிறுத்தம் என்பது கேள்விக்குறியாகும். இவ்வாறு மட்டக்களப்பு அரசியல் துறைப்பொறுப்பாளர் இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

நேற்றுப்பகல் மட்டக்களப்பு அரசியல் துறை பணிமனைமீது மேற்கொள்ளப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல்துறை அலுவலகம் மீது மட்டக்களப்பில் கைக்குண்டு வீச்சு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகம் மீது இனந்தெரியாத நபர்களினால் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்ற இத்தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள் உந்துருளியில் தப்பிச் சென்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இச்சம்பவத்தின் போது காரியாலயத்தில் ஆறு போராளிகள் இருந்துள்ளனர்.

வீசப்பட்ட ஆறு கைக்குண்டுகள் அலுவலகத்திற்குள் வீழ்ந்து வெடித்துள்ளதால் அலுவலகத்தின் யன்னல்கள், கதவுகள் மற்றும் தளபாடங்கள் ஆகியன சேதமடைந்துள்ளன. போராளிகள் அந்நேரம் பின்பக்க அறைகளில் இருந்தமையால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மட்டக்களப்பு நகர தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகத்தைப் போர்நிறுத்தக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பாண்டிருப்பு போலிஸ் சாவடி மீது கைக்குண்டு வீச்சு: இருவர் காயம்

அம்பாறை மாவட்டம் மட்டக்களப்பு- கல்முனை வீதி பாண்டிருப்புச் சந்தி சிறிலங்கா பொலிஸ் சோதனைச் சாவடி மீது இனந்தெரியா நபர்களினால் கைக்குண்டு வீசு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.இச்சம்பவம் நேற்று இரவு 7.45 மணியளவில் இடம் பெற்றுள்ளது. குறிப்பிட்ட வீதித்தடை வழியாக உந்துருளியில் சென்று கொண்டிருந்த நபர்களே இந்தத் தாக்குதலை நடத்தியதாகக் கூறப்படுகின்றது.

இச்சம்பவத்தில் கடமையிலிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும், ஊர்காவல் படைச்சிப்பாய் ஒருவரும் காயமடைந்து கல்முனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

## போராளியொருவர் உட்பட நால்வர் அம்பாறையில் கைது

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் காரைதீவு பிரதேசத்தில் விடுதலைப் புலி போராளியொருவர் உட்பட நால்வர் நேற்று நண்பகல் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். காரைதீவு கடற்கரை பிரதேசத்தில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர் உதயமேனன் என்ற போராளி என்றும், இவருடன் ஆதரவாளர்கள் மூவரும் கைது செய்யப்பட்டு சம்மாந்துறை சிறிலங்காப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் ஒன்பது விவசாயிகள் அதிரடிப்படையினரால் கைது

(அம்பாறை)

அம்பாறையில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரால் ஒன்பது விவசாயிகள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.அம்பாறையில் அக்கரைப்பற்று காஞ்சிரங்குடாப் பகுதிகளில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மட்டக்களப்பு சித்தாண்டியையும், திருக்கோவில் விநாயகபுரத்தையும் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. இவர்களின் கைதுக்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.


## நல்லூர் ஆலயப் பகுதியில் அத்துமீறி நுழையும் இராணுவத்தினர்

(நல்லூர்)

நல்லூர் உற்வசவத்தின் போது வாகனத்துடன் ஆலயச் சூழலில் நுழையும் இராணுவத்தினர் அங்கு பொதுமக்களுடன் முரண்பாடுகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

நல்லூர் உற்சவத்தின் போது ஆலய வீதிக்கு வாகனங்கள் செல்வது தடை செய்யப்படுவது வழமையாகும். இக்காலத்தில் எந்தவொரு வாகனமும் உட்செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. இதற்காக வீதிகளில் தடை முகாம்கள் போட்டு தொண்டர் அமைப் பினர் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டும் இருப்பர்கள் ஆனால் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தியுள்ள வேளையில் இராணுவத்தினர் வாகனங்களில் வந்து

(12ஆம் பக்கம் பார்க்க)



## கதிர்காமரின் கொலைக்கு பாதுகாப்புக் குறைபாடேகாரணம்

(லண்டன்) ——— இராணுவப் பேச்சாளர்

லக்ஷ்மன் கதிர்காமருக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளில் இருந்த குறைபாட்டைச் சாதகமாகப் பயன்படுத்தியே அவர் சுட்டுக கொல்லப்பட்டதாக இராணுவப்பேச்சாளர் தயாரட் ணாயக்க கூறியுள்ளார். சர்வதேச ஊடகம் ஒன்றிற்கு நேற்று வழங்கிய செவ்வியின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இலங்கையைப் பொறுத்தவரை கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக இந்தப்பிரச்சினை இருந்து வருகின்றது. பாதுகாப்பு வழங்கும் பொறுப்பை அவ்வளவு சுலபமாக ஏற்றுக் கொள்ள முடியாது. இது பாதுகாப்புப் படையினரின் பொறுப்பு மட்டுமல்ல. அதனையும் தாண்டி இந்தப்

(12ஆம் பக்கம் பார்க்க)



கதிர்காமரின் கொலைக்கு பயன்படுத்தப்பட்ட இராணுவ உபகரணங்கள்

## வரிவிளம்பரம்

**கணனிச்சேவை**

கணனி தட்டச்சு, ரென்சில் டிங், றோனியோ, cd றைற்றிங், ட்டோ கிரபிக்ஸ், டிஜிற்றல் அழைப்பிதழ்கள், வாழ்த்துக்கள், திப்பக வேலைகள், டிஜிற்றல் இயந்திரம் மூலம் போட்டோ கொப்பி போன்ற வேலைகளை ஒரே இடத்தில் விரைவாகச் செய்து பெற்றுக் கொள்ள நாடுங்கள். பொய்கை டிப்போறோட், கிளிநொச்சி. (6341)


# வடமராட்சி, தீவகம் கடற்பகுதியில் இந்திய மீனவர்கள் அத்துமீறல்

சுனாமி கடற்கோள் அனர்த்தத்தையடுத்து நின்று போயிருந்த இந்திய மீன்பிடி படகுகளின் அத்துமீறல் மீண்டும் தலைதூக்கி வருவதாக மீனவ அமைப்புக்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

நேற்றிரவு சுமார் 150 இற்கும் அதிகமான இந்தியமீன்பிடி இழுவைப்படகுகள் பருத்தித்துறை கடற்பரப்பினுள் மீண்டும் அத்துமீறிப்பிரவேசித்து மீன்பிடியில் ஈடுபட்டதாக மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நள்ளிரவு வரை அப்பகுதியில் இவ்இந்திய மீன்பிடி இழுவைப்படகுகள் தரித்து நின்று மீன்பிடியில் ஈடுபட்டதால், அச்சங்காரணமாக உள்ளூர் மீனவர்கள் உடனடியாக கரைதிரும்பியுள்ளனர்.

சுனாமி அனர்த்தத்தையடுத்து, தடைப்பட்டுப் போயிருந்த மீன்பிடித் தொழில் தற்போது படிப்படியாக இயல்பு நிலைக்குத் திரும்பி வருகின்றது. அவ்வாறானதோர் நிலையில் அரசின் உதவிகள் ஏதும் இதுவரை உள்ளூர் மீனவர்களிற்கு கிட்டியிருக்கவில்லை. எனினும் தொண்டமைப்புக்கள் மூலம் வழங்கப்பட்ட வள்ளங்கள் மற்றும் வெளியிணைப்பு இயந்திரங்களுடன் தமது சுயமுயற்சியில் மீன்பிடிவலைகளை வழங்கி தொழில் முயற்சிகளில் அம்மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

எனினும் இந்திய மீன்பிடி இழுவைப்படகுகளது அத்துமீறலால் தமது வலைகள் சூறையாடப்பட்டுவிடலாமென்ற அச்சங்காரணமாகவே தாம் கரை திரும்பியதாக மீனவ அமைப்புக்கள் தரப்பில் கூறப்படுகின்றது.

ஆயினும் தொடர்ந்து இந்திய இழுவைப்படகுகள் அத்துமீறி இலங்கை கடற்பரப்பில் வருமாயின் உள்ளூர் மீன்பிடித்தொழில் பெரும் பாதிப்பிற்குள்ளாகும் அதே வேளை நெடுந்தீவுப் பிரதேசத்தில் அத்து மீறி நுழையும் இந்திய இழுவைப் படகுகளினால் தீவக மீனவர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

நெடுந்தீவுப் பிரதேசத்தின் கடற்பரப்பினுள் இந்திய இழுவைப்படகுகள் அத்து மீறி கடற் தொழிலை மேற்கொள்வதினால் தீவகக்கடற் தொழிலாளர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கும் உள்ளாகின்ற நிலைமை காணப்படுகின்றது. ஏற்கனவே இப்பகுதியில் இழுவைப் படகுகள் மூலம் தொழில் முயற்சியில் ஈடுபட்டவர்கள் கடற் தொழிலாளர் சங்கங்களினாலும் மற்றும் கடற்படையினராலும் பிடிக்கப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதன் காரணமாக தொழிலுக்கு வரும் இந்திய மீனவர்களின எண்ணிக்கை குறைவாகக் காணப்பட்டது.

தற்பொழுது மீண்டும் இந்திய இழுவைப் படகுகளின் வருகை அதிகரித்துள்ளதுடன் கடலில் தொழில் செய்யும் நெடுந்தீவு மற்றும் ஏனைய தீவுகளைச் சேர்ந்தவர்களின் தொழில் முயற்சிகளுக்கும் அச்சுறுத்தலாகவும் இருந்து வருகின்றார்கள்.

இது சம்பந்தமாக கடற் தொழிலாளர்கள் நெடுந்தீவில் நிலை கொண்டுள்ள கடற்படையினரிடம் முறைபிட்ட போதிலும் உரிய இடத்திலிருந்து அறிவித்தல் வந்தால் மட்டுமே நடவடிக்கையெடுக்க முடியும் எனக் கூறி மக்களின் உண்மையான கோரிக்கையை புறந்தள்ளிவருவதாக கடற் தொழிலாளர்கள் குற்றம் கூறுகின்றார்கள். (41)

## முதலாமிடம்

(புதுக்குடியிருப்பு)

வடக்கு கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையில் கடந்த ஆறாம், ஏழாம் திகதிகளில் வவுனியாவில் இடம் பெற்ற தமிழ் மொழித்திறன் போட்டியில் தென்மோடி நாட்டுக்கூத்துப் பிரிவில் புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாசாலை முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

கடந்த மூன்று வருடங்களாக புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாசாலை கோவலன்கூத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இக்கூத்தின் வெற்றிக்கு இப்பாடசாலை அதிபரின் முயற்சி முக்கிய காரணமாக அமைந்துள்ளது. (08)

## குளத்தில் நீர்பற்றாக்குறை வன்னேரியில் வயல்செய்கை பாதிப்பு



வன்னேரிக்குளம் நீர்மட்டம் குறைந்துள்ளதால் வன்னேரிக் குளத்தின்கீழ் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்ட 70 ஏக்கர் வயல் கருகிய நிலையில் காணப்படுகின்றது.

வன்னேரிக்குளத்தின் கீழ்70 ஏக்கர் நிலப்பரப்பில் வயல்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது உள்ள வரட்சியினால் குளத்தின் நீர்மட்டம் குறைந்துள்ளது. இதனால் குளத்தில் இருந்து வருகின்ற நீரின் வேகம் குறைந்துள்ளது.

கடந்த இரண்டு நாட்களாக விவசாயிகள் இணைந்து வாய்க்கால்களை துப்புரவு செய்து வயல்களுக்கான நீரினை உழவு இயந்திரத்தின் உதவியுடன் இறைத்துவருகின்றனர். (தீ)

# பொதுக்கட்டமைப்பை செயற்படுத்தாமல் எந்தவொரு முன்னேற்றமும் கிடையாது

**-யாழ்.மாவட்ட அரசசார்பற்ற அமைப்பு இணையம்**

(யாழ்ப்பாணம்)

அரசு-புலிகளிற்கிடையேயான சுனாமி பொதுக்கட்டமைப்பு முழுமையாக செயற்பட ஆரம்பிக்காத நிலையில் சமாதான நடவடிக்கை தொடர்பில் எந்தவொரு முன்னேற்றத்தையும் எதிர்பார்க்க முடியாதென யாழ்.மாவட்ட அரசசார்பற்ற அமைப்புக்களின் இணையம் தெரிவித்துள்ளது.

தனது யூலை மாதத்திற்கான மாதாந்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்கள் சுனாமிப் பொதுக்கட்டமைப்பின் மூலம் தமக்கு உரிய நிவாரணம் கிடைக்குமென எதிர்பார்த்திருந்தனர். எனினும் அது நீதிமன்றத் தடையினால் முடங்கிப்போயுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களினது எதிர்பார்ப்புக்களும் பொய்த்துப்போயுள்ளது எனவும் அவ்வறிக்கையில் யாழ். மாவட்ட அரசசார்பற்ற அமைப்புக்களின் இணையம் தெரிவித்துள்ளது.

அரசு-புலிகளிற்கிடையேயான சுனாமி பொதுக்கட்டமைப்பிற்கெதிரான தடைநீக்கப்பட வேண்டுமென கேட்டுள்ள இணையம் உரிய வகையில் பொதுக்கட்டமைப்பை இயங்க அனுமதிப்பதன் மூலம் மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப முடியுமெனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இவ்வாறானதோர் சூழலிலேயே தடைப்பட்டுப்போயுள்ள சமாதானப் பேச்சுக்களை மீளஆரம்பிக்கக் கூடியதோர் சாத்தியமானதோர் நிலை ஏற்படுமெனவும், தமிழ்மக்களும் நம்பிக்கையை ஊட்டக்கூடியதோர் நிகழ்வாக அதனைக் கருதமுடியுமெனவும் இணையம் அவ் அறிக்கையில் மேலும் விபரித்துள்ள்ளது.

இவ் அறிக்கையின் பிரதிகள் கொழும்பிலுள்ள சர்வதேச நாடுகளினது தூதுவராலயங்களிற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

# வடமராட்சிப் பகுதியில் இன்றுவீடுகள் கையளிப்பு

சுனாமி கடற்கோள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடமராட்சியின் கரையோரப் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களிற்கென கட்டப்பட்டுவரும் நிரந்தர வீட்டுத்தொகுதியில் கட்டி முடிக்கப்பட்ட முதலாவது வீடுகள் வைபவரீதியாக இன்று கையளிக்கப்படவுள்ளது. பருத்தித்துறையின் கற்கோவளம் பகுதியில் கியூமெடிக்கா நிறுவனத்தின் நிதியுதவியில் கட்டி முடிக்கப்பட்ட வீடே பயனாளிகளிடம் கையளிக்கப்படவுள்ளது.

இதேவேளை தொண்டமனாறு முதல் பருத்தித்துறையின் கற்கோவளம் வரையிலான கரையோரக் கிராமங்களில் சுனாமி அனர்த்தத்தினால் சுமார் ஆயிரத்து 750 வீடுகள் அழிக்கப்பட்டுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது.

இவ்வீடுகளை மீளநிர்மாணிக்க அரச உதவிகள் ஏதும் இதுவரை வழங்கப்படாத போதிலும் தொண்டரமைப்புகளான கியூமெடிக்கா, சேவாலங்கா, ஹரிதாஸ், போரூட் மற்றும் அலையன்ஸ் என்பவை பாதிக்கப்பட்ட மக்களிற்கான வீடமைப்புத் திட்டங்களை ஆரம்பித்துள்ளன.

இதனிடையே கடந்த கால யுத்த அனர்த்தங்களின் போது குறித்த கரையோரப்பகுதிகளைச் சேர்ந்த மூவாயிரத்து 160 வீடுகள் அழிக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பிரதேசசெயலர் ந.வரதீஸ்வரன் தெரிவிக்கிறார். அவற்றில் முன்னூறு வீடுகள் உலக வங்கி நிதி ஒதுக்கீட்டின் கீழ் கட்டி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(27)

## வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் தொழில்வழிப்படுத்துநர் செயலமர்வு

வவுனியா தேசியக்கல்வியியற் கல்லூரியில் வவுனியா, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ்.சிங்கள தொழில்வழிப்படுத்துநர்களுக்கான செயலமர்வு கடந்த வெள்ளி,சனி,ஞாயிறு ஆகிய மூன்று நாட்கள் நடைபெற்றது.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் கல்வியியலாளர்களான மகேந்திரன், செல்வராஜா ஆகியோரின் இணைத்தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வின் ஆரம்பவிழாவில் வரவேற்புரையினை வவுனியா தேசியகல்வியியற் கல்லூரியின் தரமேம்பாடு உபபீடாதிபதி சிதம்பரநாதன் நிகழ்த்தினார். (10)

## இடைநிறுத்தப்பட்ட ஆசிரியர்களுக்கு ஒழுக்காற்று விசாரணை

கடந்தமாதம் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் இருந்து இடைநிறுத்தப்பட்ட மூன்று ஆசிரியர் பயிலுநர்களுக்குமான ஒழுக்காற்று விசாரணை எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரியின் ஆசிரியர் பயிலுநர் விடுதியில் மது அருந்திவிட்டு மது போதையில் உடமைகளை சேதமாக்கினார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் கல்லூரியில் இருந்து இடைநிறுத்தப்பட்ட இரண்டாம் வருட ஆசிரியர் பயிலுநர் ஒருவருக்கும், முதலாம் வருட ஆசிரியர் பயிலுநர் இருவருக்குமே இவ் ஒழுக்காற்று விசாரணை நடைபெற உள்ளது. (10)

# விபத்தில் காயமடைந்த யுவதி வைத்தியசாலையில் மரணம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பில் கடந்த பத்தாம் திகதி அன்று இடம்பெற்ற வீதி விபத்தில் படுகாயமடைந்த யுவதி நேற்று முன்தினம் மரணமடைந்துள்ளார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது சம்பவதினம் காலை முள்ளியவளையைச் சேர்ந்த லோகேஸ்வரன் மைதிலி எனும் யுவதி புதுக்குடியிருப்பிலுள்ள இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க முல்லை. கிளைக்கு வேலைக்கு சென்று கொண்டிருந்த போது, மாத்தளன் வீதியில் புதுக்குடியிருப்பு சந்தியை நோக்கி வந்துகொண்டிருந்த உந்துருளி மோதியது.

இதனால் படுகாயமடைந்த யுவதி புதுக்குடியிருப்பிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை பலனளிக்காமல் மரணமடைந்தார். (08)

# வவுனியாவில் அடுத்தமாதம் பெண்கள் சங்கம நிகழ்வு

(வவுனியா)

எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் வவுனியாவில் பெண்கள் சங்கம நிகழ்வு ஒன்று நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வவுனியா மாவட்ட பெண்கள் அமைப்பால் ஒழுங்குசெய்யப்பட்ட கலந்துரையாடல் காலை 10.00 மணியளவில் முத்தையா மண்டபத்தில் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட பெண்கள் அமைப்புக்கள் பிரதிநிதிகள் கலந்துகொண்ட இக்கலந்துரையாடலின் இறுதியில் கடந்த வருடம் வவுனியா நகரசபை மண்டபத்தில் நடாத்தப்பட்ட மாபெரும் பெண்கள் சங்கம நிகழ்வு போன்று இவ்வருடம் நடாத்த தீர்மானிக்கப்பட்டது. இப பெண்கள் சங்கம நிகழ்வை ஏற்பாடு செய்வதற்காக ஏற்பாட்டுக்குழு வவுனியா மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் முன்னிலையில் தெரிவுசெய்யப்பட்டது. (10)


## வாடிக்கையாளர் கவனத்திற்கு!


**கிளிநொச்சி A9 சாலையில் இயங்கிவருகின்ற மின்னல் இலத்திரனியல் திருத்தகம் புனரமைப்பு வேலைகள் செய்யப்படவுள்ளதால் தங்களால் 01.01.2005 முதல் திருத்துவதற்காக ஒப்படைக்கப் பட்ட உபகரணங்களை 16.08.2005 நாள் முதல் 31.08.2005 நாளுக்குள் மீளப்பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். ண்டும் புதிய முறையில் புனரமைப்புச் செய்தபின் உங்களுக்க ன சேவைகளை மீளப்பெற்றுக்கொள்ள முடியுமென்பதையு. அன்புடன் அறியத்தருகிறோம்.**

-தகவல்-
நிர்வாகம்

(சி.12525)


# சைப்பிரஸ் விமானம் வீழ்ந்து நொருங்கியது

## 121 பயணிகள் உடல் கருகி உயிரிழப்பு



(ரோம்)

**சைப்பிரசில் இருந்து ஏதென்ஸ் நோக்கிச்சென்று கொண்டிருந்த சைப்பிரஸ் விமான சேவைக்கு சொந்தமான பேயிங்ரக விமானம் ஒன்று தரையிறங்குவதற்கு முன்னதாக பிரயாணிகள் பகுதியில் காற்றமுக்கம் வீழ்ச்சி கண்டதைத் தொடர்ந்து ஏதென்ஸ் நகருக்கு வடக்கே விபத்துக்குள்ளானதில் 121 பயணிகள் உடல் கருகி உயிரிழந்துள்ளனர்.**



விபத்துக்கான காரணத்தை அறிய அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணையில் பிரயாணிகள் எவரும் உயிர் தப்பவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

பிரயாணி ஒருவர் இறப்பதற்கு முன்னர் கையடக்கத் தொலைபேசியில் தமது உறவினருக்கு அளித்த தகவலில் விமானம் நீலமாக மாறியதாகவும், விமானி நினைவிழந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

விபத்து இடம்பெறுவதற்கு சில வினாடி முன்னதாக போயிங் விமானத்தின் விமானி விமானப் பயணக் கட்டுப்பாட்டு நிலையத்திற்குத் தெரிவித்த தகவலில், காற்றமுக்கம் மற்றும் குளிரூட்டும் சாதனப் பிரச்சினைகளை தாம் எதிர் நோக்குவதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த அறிவித்தலைத் தொடர்ந்து விமானத்துடனான சகல தொடர்புகளும் அற்றுப் போயின. விபத்து நடைபெறுவதற்கு சில நிமிடம் முன்னதாக அந்த விமானத்துக்கு சமீபமாக இரண்டு கிரேக்க ஜெட் விமானங்கள் பறந்துள்ள அதே சமயம், ஒரு ஜெட் விமானத்தின் விமானி விபத்துக்குள்ளான விமானத்தின் விமானியைத் தாம் காணவில்லை எனவும் அவரது உதவியாளர் மயங்கி வீழ்ந்த நிலையில் காணப்பட்டார் எனத் தெரிவித்துள்ளார்.

இந்த அறிவித்தல் பெற்றுக் கொள்ளப்பட்டு சில நிமிடத்தில் போயிங் விமானம் விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பயிற்சியில் ஈடுபட்ட விமானம் மாயம்

ஹங்கேரியில் பயிற்சிக்காக பறந்து சென்ற ஒரு விமானம் விழுந்து நொருங்கியதாகவும், மற்றொரு விமானத்தைக் காணவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. விபத்திற்குள்ளான விமானத்தில் இருந்த இரண்டு பேர் உயிரிழந்ததனர் , மோசமான வானிலை காரணமாக இந்த விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. மாயமான விமானம் என்ன ஆனது என்று தெரியவில்லை.

## நியூசிலாந்தின் முன்னாள் பிரதமர் டேவிட் லாங் காலமானார்

(வெல்லிங்டன்)

நியூசிலாந்து முன்னாள் பிரதமர் டேவிட்லாங் நேற்று முன்தினம் காலமானார். இவர் கடந்த 1984 முதல் 1989 வரை பிரதமராகப் பதவிவகித்தவர் ஆவார். நீண்ட நாட்களாக உடல்நிலை சரியில்லாமல் இருந்த அவர் நேற்று முன்தினம் காலமானார் என அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.



**பலஸ்தீனமும் இஸ்ரேலும் ஆர்ப்பாட்டங்களையும், வன்முறைகளையும் தவிர்த்துக் கொள்வதாக இணங்கியிருக்கும் நிலையில் காசாவில் அமைச்சரவைக் கூட்டம் ஒன்றில் தலைமையேற்றுள்ள அதிபர் மக்மூத் அப்பாஸ்.**

## சென்றவார ஏவுகணை பரிசோதனை ஏவுகணை வரலாற்றில் ஒரு மைல் கல்

(இஸ்லாமபாத்)



முஷாரப்

சென்றவாரம் இடம் பெற்ற ஏவுகணை பரிசோதனை நாட்டின் ஏவுகணை வரலாற்றில் முக்கிய மான ஒரு மைல் கல்லாகும் என பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் சுதந்திர தினமான நேற்று இராஜதந்திரிகள் மத்தியில் உரையாற்றும் போதே முஷாரப்மேற்படி தெரிவித்தார். பிரதமர் சௌகத் அசீஸ் உரையாற்றுகையில் வர்த்தகம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் நாடு கணி சமான முன்னேற்றம் கண்டுள்ளது என்றும் சனநாயக நடவடிக்கைகள் பலமடைந்து வருவதாகவும் தெரிவித்தார்.இதே வேளை பாகிஸ்தானின் நிர்வாகத்திற்குட்பட்ட காஷ்மீர் உட்பட சகல மாகாண தலைநகரங்களில் நேற்று பாக். தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.




**அண்மைக்காலமாக புஷ்சுக்கு எதிரான அபிப்பிராயம் அதிகரித்து வரும் நிலையில் டெக்சாஸ் மாநிலத்தில் ஈராக் யுத்தத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்யும் மக்கள்.**

## மசூதியில் 12 குண்டுகள் வெடித்தன; பங்களாதேஷில் ஒருவர் பலி; பலர் காயம்

வங்காளதேசத்தின் கிழக்குப் பகுதியில் இருக்கும் அக்கூரா நகரிலுள்ள மசூதி வளாகத்தில் அடுத்தடுத்து 12 குண்டுகள் வெடித்ததில் ஒருவர் உடல் சிதறிப் பலியானார். பொலிசார் உட்பட 500இற்கும் மேற்பட்டவர்கள் பலத்த காயமடைந்தனர். காயமடைந்த அனைவரும் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் பலரது உடல்நிலை கவலைக் கிடமாகவுள்ளது. பொலிசார் விரைந்து சென்று சோதனை நடத்தினார்கள். அப்போது வெடிக்காத சில குண்டுகள் இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டு கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## 800 இந்திய ஊழியர்கள் வேலையில் இருந்து நீக்கம்


(லண்டன்)

இங்கிலாந்து ஹெப்ரு சர்வதேச விமான நிலையத்தில் வேலைபார்த்து வந்த ஊழியர்கள் கோரிக்கைகளை முன்வைத்ததால் 800 ஊழியர்கள் அதிரடியாக வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

இதை அறிந்த இங்கிலாந்திலுள்ள ஏனைய விமான நிலைய ஊழியர்களும் போராட்டத்தில் குதித்தனர். இதனால் விமான சேவை கடுமையாகப் பாதிக்கப்பட்டது. விமானப் பயணிகள் ஆங்காங்கே தங்க வைக்கப்பட்டனர். இந்தப் பிரச்சினையில் உடனடியாக இங்கிலாந்து அரசு தலையிட்டது. பணி நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்கள் அனைவரும் மீண்டும் வேலையில் இணைத்துக் கொள்ளப்பட்டனர். அவர்களில் பெரும்பாலா னவர்கள் இந்தியர்கள் என்பது பின்னர் தெரிய வந்துள்ளது.

# அணுசக்தி திட்டத்தை கைவிடாவிட்டால் ஈரான் மீது தாக்குதல் நடத்துவோம்

## ஜோர்ஜ் புஷ் எச்சரிக்கை



(ஜெருசலேம்)

"அணுசக்தி திட்டத்தை ஈரான் கைவிடாவிட்டல் அந்த நாட்டின் மீது தாக்குதல் நடத்துவது பற்றி பரிசீலிக்கப்படும் என்று அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் எச்சரித்துள்ளார்.

ஈரான் அணு ஆயுதம் தயாரிக்க முயற்சிப்பதாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் குற்றம் சாட்டிவருகின்றன. அத்தோடு ஈரானுடன் ஐரோப்பிய நாடுகள் சமரசம் பேசிவந்தன.

ஈரான் நாட்டில் இஸ்பாஹன் என்ற இடத்தில் யுரேனியம் செறிவூட்டும் ஆலையை ஐரோப்பியநாடுகள் பூட்டுப்போட்டு சீல் வைத்தன. அதனை மீறினால் ஈரான் மீது அரசியல் பொருளாதாரத் தடை விதிக்கப்படும் என்றும் அறிவித்தும் இருந்தன. ஆனால் இவற்றை பொருட்படுத்தாமல் ஈரான் கடந்த சில தினங்களுக்கு முன்பு அணு உலைக்கு வைக்கப்பட்டிருந்த சீலை உடைத்தது. அங்கு யுரேனியம் செறிவூட்டும் பணியைத் தொடங்கியதாக அறிவிக்கப்படுகிறது.

அணுஆயுதம் தயாரிப்பதாக வெளிநாடுகள் கூறும் குற்றச்சாட்டை ஈரான் மறுத்தது. மின்சார உற்பத்தித் திட்டங்களுக்கு மட்டுமே அணு சக்தியைப் பயன்படுத்துகிறோம் என்றும் அறிவித்தது.

ஆனாலும் ஈரானின் நடவடிக்கைகள் ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்காவுக்கு கோபத்தையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அணுசக்தி பணிகளைத் தொடர வேண்டாம் என்று சர்வதேச அணுசக்தி அமைப்பும் ஈரானுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்தப் பிரச்சினை பற்றி அடுத்த மாதம் (செப்டம்பரில்) விவாதிக்க முடிவெடுத்திருக்கிறது. இதற்கிடையில் அணுசக்தி நடவடிக்கைகளை கைவிடும்படி ஈரானுக்கு உத்தர விடுவதற்கு ஐ.நா. பாதுகாப்பு சபையில் வலியுறுத்தவும் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் திட்டமிட்டுள்ளன.

இந்த நிலையில் ஈரானுக்கு அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார். இஸ்ரேல் தொலைக் காட்சிக்கு ஜோர்ஜ் புஷ் அளித்த பேட்டியில்;

"அணுசக்தி திட்டத்தை ஈரான் கைவிட வேண்டும். இறுதிக் கட்டமாக இராணுவத்தை பயன்படுத்துவது பற்றி பரிசீலிக் கப்படும். பிரச்சினைகளைத் தீர்க்க பல வழிகள் இருக்கின்றன. இதில் கடைசி வழி இராணுவ நடவடிக்கையே யா். சனாதிபதியாக இருந்தாலும் அதைத்தான் செய்வார்கள். சமீபத்தில் எடுக் கப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் நாட்டின் பாதுகாப்புக்காகவே எடுக்கப்பட்டது இவ்வாறு ஜோர்ஜ் புஷ் கூறினார்.



**திட்டமிடப்பட்ட தினத்திற்கு ஒரு நாளைக்கு முன்பே ஈராக்கிய அரசியலமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் நிலையில் நேற்று முன்தினம் பாக்தாத்தில் குண்டு வெடித்த இடத்தைக் கடந்து செல்லும் அமெரிக்கப் படை டாங்கி.**

## நேபாளத்தில் தீவிரவாதிகள் தாக்குதல் இராணுவச்சிப்பாய் பலி:ஐந்து பேர் காயம்

(காத்மண்டு)

நேபாளத்தில் தென் மேற்குப்பகுதியில் இருக்கும் தவால் பாராசி மாவட்டத்தில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது தீவிரவாதிகள் நடத்திய திடீர் தாக்குதலில் இராணுவத்தினர் ஒருவர் பலியானார் ஐந்து பேர் காயமடைந்தனர்.

இராணுவத்தினர் திருப்பித் தாக்கியதில் 20 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பில்லி என்ற இடத்தில் கடந்த வாரம் இதேபோல் நடந்த துப்பாக்கிச் சண்டையில் இரு தரப்பிலும் 43 பேர் பலியானமை குறிப்பிடத்தக்கது.

# வாழ்க்கையின் வெற்றிக்கு தன்னம்பிக்கை, விடாமுயற்சி தேவை

# சிறுவயதிலிருந்தே இவை ஊட்டி வளர்க்கப்பட வேண்டும்

**- கிழக்கு பல்கலை துணைவேந்தர்**

(மட்டக்களப்பு)

***"வாழ்க்கையில் வெற்றிபெற ஒவ்வொருவருக்கும் விடாமுயற்சியும், தன்னம்பிக்கையும் அவசியமாகும். இத்தகைய நற்பண்புகளை சிறு வயதிலிருந்தே முன்பள்ளி மாணவர்களுக்கு ஊட்டி வளர்க்க ஆசிரியர்களும், பெற்றோர்களும் முன்வர வேண்டும்'' இவ்வாறு கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.ரவீந்திரநாத் தெரிவித்தார்.***

கிழக்குப் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற கொம்மாந்துறை "ஏஞ்சல்ஸ் முன்பள்ளி" சிறுவர் விளையாட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு அவர் உரையாற்றியபோது கூறினார்.

மட்டக்களப்பு கிறிஸ்தவ குடும்ப ஆலய குரு அருட் திரு. ஜி.ஜே. எம். ஜோசப் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் துணைவேந்தர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

கொம்மாந்துறை ஏஞ்சல்ஸ் முன்பள்ளி மாணவர்களுடன் நான் உரையாடியபோது முன்பின் அறிமுகமில்லாத என்னுடன் சில மாணவர்கள் தயக்கமின்றி சரளமாகப் பேசியது மாணவர்களின் ஆளுமையை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது.

முன்பள்ளிகளில் கற்றுத் தேர்ச்சிபெற்ற மாணவர்கள் அரசாங்கப் பாடசாலைகளில் சேர்ந்து படிக்கும்போது அவர்களது கல்வித்திறன் அதிகமாக இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது என்றார். கிழக்குப் பல்கலைக்கழக உதவிப்பதிவாளர் கே.போகீந்திரன், கல்குடா கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி ஜே.தம்பிப்பிள்ளை, டாக்டர் ரி.சுத்தானந்தன் ஆகியோரும் விசேட அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

# சமகால அரசியல் நிலைப்பாடு குறித்து பொது அமைப்புக்களுடன் சந்திப்பு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் சமகால அரசியல் நிலைப்பாடு குறித்து பொது அமைப்புக்களுடனான சந்திப்பு ஒன்று கடந்த வாரம் வட்டக்கச்சி மகாவித்தியாலய மண்டபத்தில் அரசியல் துறையைச் சேர்ந்த இராமஜெயம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சமகால அரசியல் பற்றியும், தற்போது யாழ். குடாநாட்டில் நடக்கும் படுகொலைகள், மக்களைப் பயமுறுத்தும் சிறிலங்கா இராணுவத்தினரின் செயற்பாடுகள் பற்றியும் கருத்துரைகளைப் பிரதேசப் பொறுப்பாளர் சுடர் வழங்கினார். அரசியல்துறையைச் சேர்ந்த வரதன், வட்டக்கச்சி கிராமசேவையாளர்கள், பொதுஅமைப்பு அங்கத்தவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் முதலாம் திகதி இடம்பெறவுள்ள மக்கள் எழுச்சி நிகழ்விற்கு ஒழுங்குபடுத்தலிற்கான குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் தலைவர் சி.கோபிநாத், செயலாளர் குரஞ்சன், பொருளாளர் த.ரேனுகா, உறுப்பினர்களாக பொ.பத்மநாதன், இ.பசுபதிப்பிள்ளை, பொ.ராமச்சந்திரன் ஐ.சுந்தரம்பிள்ளை, சி.பிரதீபா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (12)

# தியாகி திலீபன் மருத்துவமனையினரால் சுகாதார விழிப்புணர்வுக் கருத்தூட்டல்

(ஒட்டுசுட்டான்)

கற்சிலைமடு திலீபன் மருத்துவமனையினரால் சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றது.

கடந்த ஒன்பதாம் திகதி முத்துஐயன்கட்டு இடதுகரை அ.த.க. பாடசாலையிலும், பத்தாம் திகதி கனகரத்தினபுரம், ஜீவநகர் ஆகிய கிராமங்களிலும், ஒட்டுசுட்டான் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழரசன் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இதில் கற்சிலைமடு திலீபன் மருத்துவமனை மருத்துவர் திருமதி, செவ்வானம்"வருமுன் காப்போம்'' எனும் தலைப்பில் நோய் பற்றிய அறிகுறிகளும் அதன் தடுப்பு முறைகளும்பற்றி விளக்கியதோடு இளம் சமூகத்தினிடையே கலாச்சாரச் சீரழிவுகள் ஏற்படா வண்ணம் இருக்க வேண்டிய அவசியத்தையும் சுட்டிகாட்டியுள்ளார்.

இக்கருத்தரங்கு எதிர்வரும் காலங்களிலும் இப்பிரதேசத்தில் தொடர்ந்து நடைபெறவுள்ளது. (05)

# கூலித்தொழிலுக்கு சென்றோர் மீது படையினர் சோதனைக் கெடுபிடி!

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து பொலநறுவை உட்பட பிற மாவட்டங்களுக்குக் கூலித் தொழிலுக்காகச்சென்ற பொதுமக்கள் நேற்று முன்தினம் சிறிலங்கா படையினர் மற்றும் பொலிசாரின் சோதனைக் கெடுபிடிகளுக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் புற மாவட்டமான பொலநறுவை மாவட்டத்தில் தற்போது சிறுபோக அறுவடை வேலைகள் நடைபெற்று வருகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து பல நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் இந்த மாவட்டத்திற்குச் சென்று அறுவடைத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். அத்தோடு இப் பகுதிகளிலுள்ள அரிசி ஆலைகளிலும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்கள் வேலை செய்து வருகின்றனர்.அமைச்சர் கதிர்காமர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து இவ்வாறு சோதனைகள் அதிகரித்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# முப்பது கிராமங்களில் சுகாதார மேம்பாட்டுத்திட்டம்

(திருமலை)

சுவிடிஷ் செஞ்சிலுவைச்சங்கம் இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தின் அனுசரணையுடன் திருகோணமலை மாவட்டத்தில் முப்பது கிராமங்களில் சுகாதார மேம்பாட்டுத்திட்டம் ஒன்றை செயற்படுத்தவிருக்கின்றது.

17மில்லியன் ரூபா செலவில் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் இச்செயற்றிட்டத்தில் முப்பது கிராமங்களைத் தெரிவு செய்யும் ஆய்வு ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதியிலிருந்து நடைபெற்றுவருவதாக இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தின் திருகோணமலை மாவட்டக்கிளையின் தலைவர் டாக்டர் இ.ஜி.ஞானகுணாளன் தெரிவித்தார்.

ஆய்வுக்கு ஐம்பது கிராமங்கள் உட்படுத்தப்படும் என்றும், அதில் முப்பது கிராமங்களே தெரிந்தெடுக்கப்பட்டு அவற்றில் சுகாதார மேம்பாட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் டாக்டர் இ.ஞானகுணாளன் தெரிவித்தார்.(25)

# சிரமதானப்பணி

(ஒட்டுசுட்டான்)

கற்சிலைமடு திலீபன் மருத்துவமனைவளாகம் சிரமதானப்பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை முத்துஐயன்கட்டு ஜீவநகர் மக்களால் சிரமதானப் பணி செய்யப்பட்டுள்ளது.(05)

# அலங்கார உற்சவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி செல்வாநகர் ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த பத்தாம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.

கடந்த ஒன்பதாம் திகதி இரவு கரகம் பாலித்தலுடன் ஆரம்பமான இவ்வுற்சவம் தொடர்ந்து 19ஆம் திகதி நடைபெறும் தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறும்.

விசேட நிகழ்வாக வரும் 18ஆம் திகதி புதுமுறிப்பு, கனகபுரம் ஆனந்தநகர் (சேவியர்கடைச்சந்தி) முதலான கிராமங்கள் தோறும் அம்பாளின் ஊர்வலம் நடைபெறும்.

# கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகிகளுக்கு தலைமைத்துவப் பயிற்சிநெறி

வடக்கு கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படும். கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாக உறுப்பினர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிநெறி பூநகரியில் கடந்த திங்கள் நடைபெற்றுள்ளது.

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் நியாப், யு.என்.டி.பி. திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசங்களின் மாதர்சங்க பொருளாளர்களிற்கானதும், கிராம அபிவிருத்தி சங்கங்களின் பொருளாளர்களுக்குமான 27 பேருக்கு பயிற்சிநெறி அன்று காலை 8.30 மணிக்கு பிரதேச செயலர் மா.ஸ்ரீஸ்கந்தகுமார் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் ஆரம்பமானது. முதல் நிகழ்வை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேசசபை செயலாளர் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர். பயிற்சி இணைப்பாளராக இ.இராஜன் கடமையாற்றினார்.

இந்நிகழ்வில் முதல்நாள் பயிற்சியின் ஆரம்பத்தில் பயிற்சியின் நோக்கம் பற்றி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் த.சீவரத்தினம் விரிவாகவும் கூறினார். தொடர்ந்து பயிற்சியின் விரிவுரைகளில் தலைமைத்துவப் பண்புகள் பற்றி திருமதி ச.சிவராசாவும், கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் பற்றி ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர் விவேகானந்தனும், பணக்கொடுக்கல் வாங்கல்களைப் பதிவுசெய்யும் முறைகள் பற்றி தேசிய வங்கி முகாமையாளர் தனேஸ்வரனும், கிராம மட்டத் தகைமைத்தரவுகளை சேகரித்தலும் அதனை அபிவிருத்திக்குப் பயன்படுத்தலும் என்னும் தலைப்பில் அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.சண்முகானந்தனும் விரிவுரைகள் ஆற்றினர்.

இரண்டாம் நாள் நிகழ்வில் கச்சேரி அபிவிருத்தி உத்தியோகத்தர்களான தி.பத்மானந்தன், அ.கேதீஸ்வரன், பி.அமல்ராஜ், பிரதேசசெயலர் மா.சிறீஸ்கந்தகுமார் ஆகியோர் உரையாற்றினர். மூன்றாம் நாள் பயிற்சியில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும், பிரதேச செயலரும் பயிற்சி வகுப்புகளில் விரிவுரைகள் மேற்கொண்டனர். (34)

# ஆடிச்செவ்வாய் யாக விழா

இரணைமடு ஸ்ரீ கனகாம்பிகை அம்பாள் பெருங்கோவிலில் ஐந்தாவது ஆடிச்செவ்வாய் யாகவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலை முதல் நண்பகல் வரை மிகவும் சிறப்பான முறையில் நடைபெறவுள்ளது. காலை யாகமும், மதியம் வசந்த மண்டபப்பூசையும், அதைத்தொடர்ந்து அம்பாள் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் வீதி உலாவந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார். அதன் பின் அடியார்களுக்கு அன்னதானம் வழங் கப்படும். இந் நிகழ்வு கடந்த18 ஆண் டுகளாக மேற்படி ஆலயத்தில் நடைபெற்று வருகின்றது.

எமது தாயக மண்ணில் போர் அற்ற நிலை உருவாகவேண்டும், தாயகம் விடுதலை பெறவேண்டும், தேசியத் தலைவரும், போராளிகளும், மக்களும் சுகமாக வாழ எல்லாம் வல்ல அம்பாள் அருள்புரிய வேண்டும் என்று அம்பாளை வேண்டி இந்த யாகநிகழ்வு இடம்பெறுகின்றது. ஆகவே அம்பாள் அடியார்கள் இதில் கலந்து அருள் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

# குற்றத்தடுப்பு நடவடிக்கை

(கிளிநொச்சி)

அக்கராயன் காவல் பணிமனை நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் காவல்துறையினர் தீவிர குற்றத்தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வழமையான வீதி ஒழுங்கு குற்றத்தடுப்பு நடவடிக்கைகளுடன் வீதியில் நின்று பெண்களுடன் சேஷ்டைபுரியும் இளைஞர்கள் மீது தீவிர நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளதாகவும் அக்கராயன் காவல்பணிமனைப் பொறுப்பாளர் ஞானமுத்து தெரிவித்துள்ளார். (15)

# கிணற்றில் வீழ்ந்த சிறுவன் பரிதாபகரமாக உயிரிழப்பு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி ஆறுமுகம் வீதியில் மூன்று வயதுச்சிறுவன் கிணற்றில் தவறிவீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் வீட்டாருக்குத் தெரியாமல் கிணற்றடிக்குச் சென்ற வேளை தவறிவீழ்ந்துள்ளார். நேற்று முன்தினம் மாலை நான்கு மணியளவில் இல.201 ஆறுமுகம் வீதியில் வசித்த சாந்தரூபன் கிருசாந்தன் (வயது-03) என்ற சிறுவனே கிணற்றில் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். (12)

# புதிய தொழில்நுட்பத்துடன் நெல் அறுவடை இயந்திரம் இலகு கடனில் விவசாயிகளுக்கு வழங்கல்

(விசுவமடு)

நெல் உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகள் நெல் அறுவடைக் காலத்தில் எதிர்கொண்டுவந்த பிரச்சினைக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தற்போது தீர்வு கண்டுள்ளது.

புதிய தொழில்நுட்பம் அடங்கிய முறையில் நெல் அறுவடைசெய்து உடன் நெல்லை வேறாக்கும் வலுவுள்ள இயந்திரங்களைக் கொள்வனவு செய்து கிராமிய அபிவிருத்தி வங்கி விவசாயிகளுக்கு இலகு கடன் அடிப்படையில் வழங்கி வருகிறது.

இந்தவகையில் கடந்த நான்காம் திகதி வட்டக்கச்சியில் நெல் அறுவடைசெய்து உடன் நெல்லை வேறாக்கும் மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான இயந்திரமொன்றை வட்டக்கச்சி கிராமத்ததைச்சேர்ந்த க.தங்கராசா என்பவருக்கு கடன் அடிப்படையில் வழங்கப்பட்டது. இந்நிகழ்வை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி. கரிகாலன் இயந்திரத்தை இயக்கும் சாவியை பயனாளியிடம் கையளித்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் கிராமியஅபிவிருத்தி வங்கிப்பணிப்பாளர் ப. விஜிதரன் மற்றும் கிராமிய அபிவிருத்தி வங்கி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆ. உதயன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன திட்டச்செயலாளர் சி. அமிர்தலிங்கம், த.பொ.மே.நிறுவன திட்ட அலுவலர் மு. கந்தசாமி, த.பொ.மே. நிறுவன நிர்வாக உத்தியோகத்தர் திருமதி ச.மதிவதனி மற்றும் பணியாளர்கள், விவசாயிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். நெல் அறுவடையை மேற்கொண்டு உடன் நெல்லை வேறாக்கும் வலுவுள்ள இந்த இயந்திரத்தை, இருக்கையில் இருந்தபடியே நெல் அறுவடையை மேற்கொள்ளக் கூடிய இரண்டு சில்லு உழவு இயந்திரத்தின் வடிவமைப்பில் உருவாக்கப்பட்டுள்ளது.

வயலில் நெற்கதிர்கள் உறுதியாக நிற்கும் போது இலகுவில் நெல் அறுவடைசெய்து உடன் நெல்லை வேறாக்கிக்கொடுக்கும். (சூடு மிதித்துக்கொடுக்கும்) ஒரே நாளில் சுமார் மூன்று ஏக்கர் நெற் கதிரை அறுவடைசெய்து நெல்லை வேறாக்கும் வலுவுள்ளது. ஒருநாள் அறுவடைக்கு ஆறு லீற்றர் எரிபொருள் [illegible]டுமே தேவைப்படும். இலகு [illegible] முறையில் இயக்கக்கூடிய இய[illegible]ரத்தை விவசாயிகள் பெற்று தமது நெல் அறுவடையை உரிய காலத்தில் மேற்கொண்டு நெல் உற்பத்தியை மேற்கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் தெரிவிக்கின்றனர். (46)

# எமக்கான சொந்த இடங்களை படையினர் விடுவிக்காதவரை குருநகர் வடிசாலைக் காணியை விட்டுச் செல்லமாட்டோம்

### -மணியம் தோட்டம், உதயபுரம் மக்கள் தெரிவிப்பு -

(குருநாகல்)

மணியம் தோட்டம், உதயபுரம் பகுதியில் இருந்து சிறிலங்காப் படைகளின் ஆக்கிரமிப்பால் இடம்பெயர்ந்து குருநகர் அரச வடிசாலைக் காணியில் தற்காலிகமாகத் தங்கியுள்ள 45 குடும்பங்களைச் சேர்ந்த 200 இற்கும் மேற்பட்ட மக்கள் தமது சொந்த இடங்களைப் படையினர் விடுவிக்காதவரை தாம் அப்பகுதியை விட்டு வெளியேறப் போவதில்லை என திட்டவட்டமாக அறிவித்துள்ளனர்.

தம்மை அக்காணியை விட்டு வெளியேறும்படி யாழ். பிரதேச செயலக அதிகாரிகள் வற்புறுத்துவது அடிப்படை மனித உரிமையை மீறும் செயல் என்றும், இது குறித்து யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இடம்பெயர்ந்தோருக்கான சேவைகள் அலுவலகத்தில் முறைப்பாட்டைத் தாம் செய்திருப்பதாகவும், தமது உணவு முத்திரைகளை நிறுத்தி இருப்பதும், அனைத்து நிவாரண உதவிகளையும் நிறுத்துவோம் என அதிகாரிகள் அச்சுறுத்துவதும் எம்மைப் போராட்ட சூழலில் தள்ளும் செயல் என்றும் இடம்பெயர்ந்து, இப்பகுதியில் தங்கியுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர். (25)

# கெடுபிடிகளை ஏற்படுத்தி இலஞ்சம் பெறும் பொலிசார்

### -யாழ் மக்கள் விசனம்

யாழ். குடாநாடடில் மீண்டும் பொலிசார் நேற்று முன்தினம் முதல் கெடுபிடி நடவடிக்கைகளை அதிகரித்து இருப்பதுடன், சாலைகளில் செல்லும் பயணிகளின் பேருந்து முதல், முச்சக்கர வாகனம், உந்துருளிகள் வரை வழிமறித்து ஆவணங்களை சரிபார்த்து வருவதுடன், சிறு குற்றங்களுக்கும் பெருந்தொகையான பணத்தை அறவீடு செய்து வருவதாகப் பொதுமக்கள் மற்றும் வாகனச் சாரதிகள் விசனம் தெரிவிக்கின்றனர். மற்றும் பல இடங்களில் ஆவணங்கள் இன்றி வரும் வாகனங்களின் சாரதிகளிடம் பற்றுச்சீட்டு எதுவும் இன்றி இலஞ்சமாக பொலிசார் பணத்தைப் பெற்றுக் கொண்டு அவ்வாகனங்களை விட்டுவிடுவதாகவும் மற்றும் சட்டவிரோதமாக வரும் மண், மரங்கள் போன்றவற்றுக்கும் இலஞ்சமாக பெருந்தொகையான பணத்தைப் பெற்றுக்கொண்டு வாகனங்களை அனுமதிப்பதாகவும், இதனால் பொலிசார் பெருந்தொகையில் பணத்தை பெற்று வருவதுடன், மணல் கடத்தலில் ஈடுபடுவோரும் சுதந்திரமாக தமது தொழிலை பகலிலேயே செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (28)

## மக்கள் பீதி

யாழ்ப்பாணம் நெடுந்தீவுப் பகுதியில் படையினர் அண்மைக் காலமாக மேறகொண்டுவரும் குடும்ப விபரம் சேகரிக்கும் நடவடிக்கை முறையால் அப்பகுதி மக்கள் பீதியடைந்துள்ளனர்.

# பக்தர்களை விழிப்புடன் இருக்க கோரிக்கை

நல்லூர் ஆலய உற்சவத்திற்கு வரும் பக்தர்கள், பொது மக்கள் தம்முடைய நகை, பணம் மற்றும் பெறுமதி மிக்க உடைமைகளைக் கவனத்துடன் பாதுகாக்கவும் சந்தேகத்திற்குரிய நபர்கள் நடமாட்டங்கள் உங்கள் அருகில் காணப்பெற்றால் உடனடியாக அருகில் உள்ளவர்களை உசார்ப்படுத்துவதுடன் விசேட செயலணியின் உதவிகயை நாடுமாறும் கேட்கப்படுகின்றனர். கடந்த முறை போன்று திருட்டுச் சம்பவங்களைத் தவிர்க்க பொதுமக்கள், பக்தர்கள் விழிப்புடன் இருக்கும் படியும் திருடர்கள் பொருட்களை அபகரிக்க பல்வேறு வழிகளை நாடலாம் என்பதால் அதிஉச்ச விழிப்புடன் இருக்கும்படியும், மற்றும் விசேட செயலணியின் தொண்டர்களும் குற்றச் செயல்களைத் தடுக்க தீவிரமாக செயற்படுவார்கள் என்றும் விசேட செயலணிக்குழு தெரிவித்துள்ளது.(28)

# மிதிவெடி விழிப்புணர்வு வாரத்தில் யாழ்.மாவட்டத்தில் அங்கவீனர்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டி

(யாழ்ப்பாணம்)

மிதிவெடி விழிப்புணர்வு வாரத்தினை முன்னிட்டு யுனிசெப் நிறுவனத்தின் நிதி உதவியுடன் மிதிவெடியால் அங்கவீனர்களாக இருக்கின்றவர்களுக்கு சைச்கிளோட்டப் போட்டியை ஒகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி யாழ். மாவட்ட ரீதியாக நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மிதிவெடி அலுவல்கள் திணைக்கள அலுவலர் தெரிவித்துள்ளார்.

இந்த சைக்கிளோட்டப் போட்டியில் மிதிவெடியால் மட்டுமன்றி வேறு காரணங்களாலும் அங்கவீனர்களாக இருக்கின்றவர்களும் பங்குபற்றலாம்.

இதேவேளை ஒகஸ்ட் 15 ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 21 ஆம் திகதி வரை மிதிவெடி விழிப்புணர்வு வாரமாக அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தக் காலப் பகுதியில் மிதிவெடியால் அங்கவீனராக இருக்கின்ற ஆண், பெண் என இருபாலருக்கும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்வாறு இந்த விழிப்புணர்வு வாரத்திற்குள் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுகளாக பாடசாலை மாணவர்களிடையே மிதி வெடியால் ஏற்படுகின்ற விளைவுகள் சம்பந்தமான விடயங்களும் பொது மக்கள் மத்தியில் மிதிவெடி அகற்றப்படாத இடங்களை எத்தகைய முறையில் கையாளுதல் மிதிவெடி அபாயத்தில் இருந்து விடுவிப்பது தொடர்பான பதாதைகள், சுவரொட்டிகள் ஒட்டுதல் எல்லா பிரதேசங்களிலும் ஒலிபெருக்கி மூலம் விழிப்புணர்வு தொடர்பாக கருத்துப் பகிர்வுகளை மேற்கொள்ளல், பாடசாலை மாணவர்களுக்கு மிதிவெடி அபாயத்தின் தன்மை தொடர்பான ஓவியப்போட்டியை நடாத்துதல் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்துள்ளனர். (கீ)

# இடையூறுகள் அதிகம் காணப்படும் பருத்தித்துறை மீன்சந்தை வீதி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகர்ப் பகுதியில் அமைந்துள்ள மீன் சந்தைக்கு செல்லும் பாதையால் பயணங்களை மேற்கொள்வதில் பெரும் இடையூறுகள் ஏற்பட்டுள்ளது. இப்பாதையில் முச்சக்கரவண்டிகள் நிறுத்துவதாலும் நடைபாதை வியாபாரிகளாலும் போக்குவரத்துக்கு இடையூறுகள் விளைவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறை முதலாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள இம் மீன் சந்தைக்கு செல்லும் வீதி ஒடுக்கமாக இருப்பதாலும் துறைமுகத்தால் பாரவூர்திகளில் பொருட்களோடு வரும் பிரதானபாதையை சிறிலங்கா இராணுவத்தினர். உயர்பாதுகாப்பு வலயமென்ற போர்வையால் தடைவிதித்திருப்பதாலும், அப்பாரவூர்திகளும் இம மீன்சந்தைப் பாதையால் வருவதாலும், பொதுமக்களின் பயணத்திற்கு பெரும் இடையூறு ஏற்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. (கா)

# படையினரின் அச்சுறுத்தும் நடவடிக்கைகளால் தென்மராட்சி மக்கள் பீதியடைந்துள்ளனர்

தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த சில நாட்களாக இரவு ரோந்து நடவடிக்கைகளை சிறிலங்கா இராணுவத்தினர் தீவிரப்படுத்தி இருப்பதாக தெரியவருகிறது. நாவற்குழி,கைதடி, நுணாவில், சாவகச்சேரி, மீசாலை, கொடிகாமம், மிருசுவில் பகுதிகளில் நூற்றுக்கணக்கில் படையினர் ஆயுதங்கள், கொட்டாண்கள் சகிதம் மக்கள குடியிருப்புகளை அண்டிய பகுதிகளில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருப்பதாகவும் மற்றும் சிறிலங்காப் புலனாய்வுத்துறையின் அச்சுறுத்தும் நடவடிக்கைகள் இப்பிரதேசங்களில் அதிகரித்து இருப்பதாகவும், பல பொதுமக்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (28)

# புலம்பெயர்ந்து வாழ்கின்ற எமது உறவுகள் தொடர்ந்தும் எமது கலாசாரத்தை பின்பற்றுகின்றனர்

### – பேராசிரியர் அ. சண்முகதாஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து புலம்பெயர்ந்து மேற்கு நாடுகளில் வாழ்கின்ற எமது தாயக உறவுகள் எமது கலை கலாச்சார பண்பாட்டு விழுமியங்களைத் தொடர்ந்தும் பின்பற்றிக் கொண்டு இருக்கின்றனர். ஆனால், யாழ்ப்பாணத்தில் இருப்பவர்கள் அத்தகைய பண்பாட்டு விழுமியங்களை மறந்து விட்டனர் என பேராசிரியர் அ.சண்முகதாஸ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெற்ற மாதாந்த அரங்கேற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது தாயக உறவுகள் புலம்பெயர்ந்து மேற்கு நாடுகளில் வாழ்கின்ற போதிலும் எமது தமிழ் பண்பாட்டு விழுமியங்களைத் தொடர்ந்து பின்பற்றிக்கொண்டு இருக்கின்றார்கள். மேற்கத்தேய இசைக் கருவிகள் வளர்ச்சியடைந்து செல்லுகின்ற இன்றைய காலகட்டத்தில் எமது பண்பாட்டுடன் கூடிய மிருதங்கம், வயலின் போன்ற இசைக்கருவிகளை இன்றும் பயின்று வருகின்றனர் என்றால் அவர்கள் எமது பண்பாட்டுடன் இன்றும் ஒன்றிப்போய் இருக்கின்றார்கள் என்றுதான் சொல்லவேண்டும். ஆனால் இங்குள்ள எம்மவரோ கலைகளையும், கலாச்சாரத்தினையும் மறந்து விட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் இது போன்ற பாரம்பரிய இசைக்கருவிகள் பயில்கின்றவர்களின் தொகை மிகவும் அரிதாகவே காணப்படுகின்றது. அதிலும் சிலர் கல்விக்காக இதனைக் கற்கின்றார்கள்.

எமது பண்பாட்டு விழுமியங்களை அழியவிடாது கட்டிக் காப்பதற்கு இளம் தலைமுறையினர் சரியான முறையில் வழிநடத்திச் செல்ல வேண்டியது பெரியவர்களின் முக்கிய பொறுப்பாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (கீ)

# மின்சாரம் வழங்க ஏற்பாடு

சுனாமி கடல்கோள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு வடமராட்சிப் பகுதியில் தற்காலிக இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள குடியிருப்பாளர்களுக்கு மின் பிறப்பாக்கிகள் மூலம் மின்னொளி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு ஒவ்வொரு வீட்டிற்கும் தலா ஒரு மின்குமிழ் வீதம் அனைத்து வீட்டிற்கும் ஐ.ஐ.சி.எஸ் நிறுவனம் மூலம் வழங்கவுள்ளதாக வடமராட்சிக்கான இலங்கை மின்சார சபைப் பிரதிநிதி தெரிவித்துள்ளார். மேற்படி தீமானத்தினை பருத்தித்துறைப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் முடிவெடுத்துள்ளனர்.

இவ் இடைத்தங்கல் முகாம்களில் மின்னொளி வசதியின்மையால் மாணவர்கள் கல்வி கற்பதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (கா)

# பழுதடைந்த பேருந்துகளைதிருத்த போதியளவு ஊழியர்கள் இல்லை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் வடபிராந்திய போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகளை மீள் திருத்தம் செய்யவும் பழுதடைந்த பேருந்துகளைத் திருத்தவும் ஊழியர்கள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை நிலவி வருவதாகப் போக்குவரத்து சபை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால் பழுதடையும் பேருந்துகளை மீள்திருத்தம் செய்வதில் காலதாமதம் ஏற்படுவதாகவும் மற்றும் போக்குவரத்து சபையில் நிலவி வரும் வெற்றிடங்களும் நீண்ட பல வருடங்களாக நிரப்பப்படாமல் உள்ளதாகவும் இதனால் துறைசார்ந்த வேலைத் திட்டங்களை மேற்கொள்வதில் பாரிய சிக்கல்களை தாங்கள் எதிர்நோக்கி வருவதாகவும் இவ்வதிகாரி தெரிவித்துள்ளார். (28)

# யாழ்ப்பாணத்தில் வீதி விபத்துக்கள் அதிகரிப்பதற்கு வீதிகள் அகலமாக்கப்படாமையே காரணம்

### -யாழ்.மாவட்ட மோ.போ.உதவி ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் நாளாந்தம் வீதி விபத்துக்கள் அதிகரிப்பதற்கு வீதிகள் அகலமாக்கப்படாமையே முக்கிய காரணம் என யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக குடாநாட்டில் வீதிவிபத்துக்கள் மிகவும் அதிகரித்த வண்ணம் இருக்கின்றது. இவ்வாறு வீதிவிபத்துக்கள் நாளாந்தம் அதிகரித்துக்கொண்டு செல்வதற்கு வீதிகளின் அகலம் குறைவாக இருப்பதே முக்கியகாரணமாக உள்ளது. குடாநாட்டில் தற்போது அதிகரித்த வீதி பாவனையில் மோட்டார் வாகனங்கள் இருப்பதும் வீதி முறைகளை கவனத்திற்கொள்ளாது வாகனம் செலுத்துவதும் இந்த வீதி விபத்துக்கள் அதிகரித்து செல்வதற்கு காரணமாக இருக்கின்றது.

யாழ்.குடாநாட்டைப் பொறுத்தவரை சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாதவர்களும்,18வயதுக்குக் குறைந்தவர்களுமே அதிகமாக வாகன விபத்துக்குள்ளாவதாகத் தெரியவருகிறது யாழ்ப்பாணத்தில் மிகவேகமாக செலுத்தும் வாகனங்களின் வேகத்தினை கவனிப்பதற்கு பொலிசாரிடம் வேகக்கணிப்பீட்டுக்கருவி இல்லாமல் இருப்பதும் இந்த வீதி விபத்துக்கள் அதிகரித்துச் செல்வதற்குக் காரணமாக அமைகிறது. எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (கீ)


மருதமடு மாதாவே!
எங்கள் எண்ணமெல்லாம்
உன்னிடத்தை நாடி நிற்குதே-வாய்
ஏற்றிப்புகழ் பாமாலை பாடிச் சொல்லுதே.

ஓடர் நகைகளை 22கரட் தங்கத்தில்
உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் செய்திட
நாடவேண்டிய இடம்

**மடு அரசி நகைமாடம்**

கனகபுரம் தெரு, கிளிநொச்சி.

(சி-12436)




இந்நாட்டில் நிரந்தர
சமாதானமும் அமைதியும் நிலவ
மருதமடு மாதாவே! எங்களுக்காக
வேண்டிக்கொள்ளும்.

**அன்ரன் காட்வெயர்ஸ்**

சகல வகையான இரும்புப் பொருட்கள்
கட்டடப் பொருட்கள், மின்சார பாவனைப் பொருட்கள்
துவிச்சக்கரவண்டி உதிரிப்பாகங்கள், மீன்பிடி உபகரணங்கள்

விற்பனையாளர்

பெரிய கடை,
மன்னார். (சி-12437) T.P :- 023-- 2232881




மருதமடு மாதாவே! உனைத் தேடுவோர் துயரம் அகல,
இவ் ஊரிலே உன்புகழ் பரவ - எங்கும் ஒளியருள் வீசி வருக!
விவசாய உரவகைகள், கிருமிநாசினிகள்,
உழவு இயந்திரஉதிரிப்பாகங்கள், கட்டடப்பொருட்கள்,
துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்கள் ஆகியவற்றை
மலிவாகப்பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

**க.டோனேசன் அன் பிறதர்ஸ்**

பிரதான வீதி,
முருங்கன். (சி-12438)
தொ.பேசி-023-22 32603
023-22 32604




மருதமடுத் திருப்பதியில் அருளாட்சி புரியும்
அன்னையின் அருள்வேண்டி நிற்கின்றோம்.

**ஏஞ்சல்**
**மூக்குக் கண்ணாடி நிலையம்**

வன்னி மக்களின் நலன் கருதி மிகக் குறைந்த விலையில் தரமான
பிரேம்களைக் கொண்ட மூக்குக் கண்ணாடிகளை
உங்கள் அருகாமையில் உடனுக்குடன் பெற்றுக்கொள்ள
நம்பிக்கையான ஸ்தாபனம்-பிறேம், லென்ஸ் சன்கிலாஸஸ்.

உங்கள் விழிகளின் பாதுகாவலர்
இலவச கண் பரிசோதனை
ஏஞ்சல் ஒப்டீசியன்,
1/1 ஆஸ்பத்திரி வீதி,
மன்னார். (சி-12439)

Angel Optictian,
1/1 Hospital Road,
Mannar. T.P:- 023 - 2232221.
023- 2232872



மருதமடுத்திருப்பதியில் மக்கள் துயர் தீர்க்கும் நாயகியின்
திருவருள் பாலிக்க வேண்டுகின்றோம்

அசல் 22 கரட் தங்க நகைகளை கைதேர்ந்த
தொழில்நுட்ப வல்லுனர்களால்
மனதைக்கவர்ந்த டிசைன்களில்
செய்து கொள்ள இன்றே நாடுங்கள்


**துங்கமதி நகையகம்**

துணுக்காய்சாலை, யோகபுரம், மல்லாவி.
(சி-12440)




# மருதமடு மாதா ...
## சிறப்பிதழ் -


### மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகையின் ஆசிச்செய்தி



மருதமடுத்திருத்தலத்தில் இடம் பெறுகின்ற ஆவணித்திருவிழா பற்றி சிறப்பு வெளியீடு ஒன்றை ஈழநாதம் வருடா வருடம் வெளியிட்டு வருவதற்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மருதமடு மாதாவின் திருப்பதி இலங்கையில் வாழும் மக்களுக்கு தம் இதயத்திற்கு அருகேயுள்ள ஒரு தாய் இல்லமாக விளங்கி வருகிறது. நாட்டின் எல்லாப் பாகங்க ளிலிருந்தும் இன, மத மொழி வேறுபாடுகளைக் கடந்து நான்கு இலட்சத்திற்கு மேற்பட்ட பக்தர்கள் இவ் விழாவின்போது ஒன்று கூடுவார்கள்.

மருதமடுத்திருப்பதியின் ஒரேயொரு நோக்கம் பக்தர்கள் இறைவனோடு சக மனிதர்களோடும் உறவில் ஆழப்படுத் தப்பட்டு அவர்கள் வாழ்விலே ஆன்மீக மறுமலர்ச்சியை பெற்றுக்கொள்ளச் செய்வதாகும். இப்படியாக இது ஓர் ஆன்மீக தேடலின் வீடு என்பதனால், இந்த நோக்கத்திற்கு மாறாக இருக்கக்கூடிய அனைத்து களியாட்ட நிகழ்வுகள், மதுபானப் பிரயோகம் ஆடல்-பாடல் என்பன முற்றாக இங்கு தடைசெய்யப்பட்டுள்ளன. மேலும் தனித்தியானத்திற்கும், பொது வழிபாடுகளுக்கும் ஏற்ற அமைதியான சூழல் இங்கே தொடர்ந்து பேணப்படுகின்றது இந்த இலட்சியத்தை அடைவதற்கான வழியிலே இறை வார்த்தை மக்களுக்கு பகிரப்பட்டு வருவதுடன், மக்கள் தம் உடல், உள ஆன்மீக நோய்களிலிருந்து விடுபடவும் வழிபாடுகள் இடம்பெறுகின்றன. மருதமடுத் திருத்தாயாரிடம் வருகின்ற ஒவ்வொருவரும் இந்த நோக்கங்களை அடைந்து கொள்ளவேண்டும் என்றும் இங்கே குடிகொண்டு எழுந்தருளியிருக்கின்ற மருதமடுத் திருத் தாயாரினால் ஒவ்வொருவரும் ஆசிர்வதிக்கப்படவேண்டும் என்றும் ஆசித்து,திருயாத்திரிகர்கள் அனைவருக்கும் நல்வரவு கூறி நிற்கின்றேன்.

### யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம்ஆண்டகையின் ஆசிச்செய்தி



மருதமடு அன்னையின் ஆவணிப் பெருவிழாவையொட்டி ஈழநாதம் பத்திரிகையின் சிறப்பிதழுக்கு ஆசி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

ஆவணி மாதம் 15ம் திகதி வருடாந்தம் கொண்டாடப்படும் மருதமடு அன்னையின் திருவிழாவானது அங்கு நடைபெறும் திருவிழாக்களிலெல்லாம் மிக முக்கியமானத்தாகும். கலாதிகாலமாக சிங்களக் கத்தோலிக்கமக்களும், தமிழ்க் கத்தோலிக்கமக்களும் அங்கு குழுமி வந்து விழாக் கொண்டாடி இருக்கிறார்கள். உண்மையில் மருதமடுப் பதியானது தமிழ்ப் பகுதியில் சிங்களத் தமிழ் கத்தோலிக்க மக்கள் ஒன்று கூடி நட்பைப் பகிர்ந்து அன்பை வளர்க்கும் ஒரே ஒரு இடமாக இன்றும் விளங்கி வருவது மகிழ்ச்சிக் குரியதாகும். இலங்கையில் கடந்த 2 தசாப்தங்களாக நடைபெற்ற கொடிய போரின் விளைவாக சிலகாலம் மருதமடுப் பதியில் சிங்கள தமிழ் மக்கள் ஒன்றுகூடுவது தடைப்பட்டிருந்தாலும் இப்போது திரும்பவும் ஓரளவு வழமை நிலைக்குத் திரும்புகிறது என்றே கூறவேண்டும்.

இன்று தமிழ் மக்கள் மகிழ்வோடு அனுபவிக்கின்ற ஓர் அமைதியான நிலை மருதமடு அன்னையின் தென்னிலங்கைப் பவனியின் பின்னரே ஏற்பட்டது. இன்றைய இந்த அமைதி நிலைக்கு மருதமடு அன்னையே அருள்பாலித்திருக்கிறாள் என்பதை நாம் ஏற்றுக் கொள்ளுகின்ற வேளையில் இன்று தோன்றியுள்ள பல நெருக்கடி நிலைகளிலிருந்தும் நாம் விடுதலை பெற அன்னையின் அருளையே நாடவேண்டும்.

தடைப்பட்டுப் போயுள்ள பேச்சுக்கள் திரும்ப நடைபெறவும் பொதுக் கட்டமைப்பில் ஓர் இணக்க நிலை காணப்படவும் போர் மூழுமோ என்ற பயவுணர்வு நீங்கி அமைதியுடனும் சமாதானத்துடனும் தமிழ் மக்கள் இலங்கை நாட்டில் வாழ்ந்துவர மருதமடு அன்னை அருள்பாலிப்பாராக.

## உறவின் பாலம் ம...

ஆவணி மாதம் 15ஆம் திகதி மடுப்பதி மீண்டும் ஒரு தடவை விழாக் கோலம் பூண்டிருக்கின்றது. சிங்கள தமிழ் கத்தோலிக்க மக்கள் அனைவரும் இன மத பேதமின்றி அன்னையின் பதியில் ஒன்று கூடி விழா எடுக்கிறார்கள்.

இலங்கைக் கத்தோலிக்கத் திருச்சபை வரலாற்றில் மடுப்பதிக்கு விசேட இடம் உண்டு. ஆரம்பம் முதல் இன்று வரை தமது வேறுபாடுகளை மறந்து சிங்களவரும், தமிழரும் கத்தோலிக்கர் என்ற இணைப்பில் ஒன்று சேரும் இடம் மடுத்தாயின் மடுப்பதியாகும். நாட்டில் தற்போது நிலவிவரும் யுத்தமற்ற அமைதி நிலை காரணமாக மடுப்பதிக்கு வரும் சிங்களக் கத்தோலிக்கர்களின் தொகை அதிகரித்து வருகிறது.

இயேசுக்கிறிஸ்துவின் தாய் அன்னை மரியாள் எமக்கெல்லாம் தாய் ஆவாள். இந்த தேவதாய் தாம் காட்சி கொடுத்த அல்லது எழுந்தருளி இருக்கின்ற இடங்களுக்கு ஏற்ப பல பெயர்களைக் கொண்டுள்ளார். தேவமாதா, கன்னிமரியாள், ஆரோக்கியமாதா, பரலோக மாதா, பத்திமாமாதா, லூர்துமாதா, வேளாங்கண்ணிமாதா, கப்பலேந்திமாதா, கதிரைமாதா, மடுமாதா என்று அழைக்கப்படுவதெல்லாம் இறைவனின் தாய் அன்னை மரியாளையே குறிக்கும்.

ஆவணி மாதம் 15ஆம் திகதி தேவ அன்னை[illegible] விண்ணேற்புத் தினமாகும். இயேசுக்கிறிஸ்துவிற்கு அடுத்தபடியாக உடலோடும், ஆன்மாவோடும் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டவர் தேவ அன்னையாவார். எந்தவிதமான பாவ மாசும் அணுகாமல் அவர் பாதுகாக்கப்பட்டவர். எனவேதான் இயேசுவின் உடலைப்போல தேவதாயின் உடலும் அழிந்துவிடவில்லை. 1950ஆம் ஆண்டு 12ஆம் பத்திநாதர் பாப்பரசர் இதனை ஒரு மறை உண்மையாகப் பிரகடனப்படுத்தினார். இத் தினமான ஆவணி 15ஆம் நாள் கத்தோலிக்க மக்கள் எல்லோரும் ஆலயத்திற்குச் சென்று திருப்பலி கண்டு வேண்டும் கடன்திருநாளாகவும் உள்ளது.

தேவ அன்னை விண்ணேற்பு அடைந்த இந்த நாள் தேவதாயின் பெயர்கொண்ட ஆலயங்களில் எல்லாம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இந்த வகையில் யாழ் புனித மரியன்னை பேராலயம், நாவாந்துறை பரலோக மாதா ஆலயம், கரவெட்டி மாதா கோவில், சில்லாலை கதிரை மாதா ஆலயம், மடுமாதா யாத்திரைத்தலம் என்பன இங்கு குறிப்பிடத்தக்கவையாகும். இன்று உலகெங்கிலும் தேவ அன்னை பெயரால் கட்டியெழுப்பப்படும் ஆலயங்களும், யாத்திரைத்தலங்களும் அங்கு கூடும் ம[illegible]கள் வெள்ளமும் தேவ அன்னையின் புகழை பறைசாற்[illegible]வளின் பக்தியை வளர்க்கின்றன..

பிரான்சில் லூட்சில் உள்ள லூர்துபதி, போர்த்துக்கலில் மார்சபியேலில் உள்ள பத்திமாபதி, இங்கிலாந்து வொல்சிங்கில் உள்ள மாதாபதி, இந்தியாவின் வேளாங்கண்ணியில் உள்ள வேளாங்கண்ணிமாதாபதி, இலங்கையில் மடுவில் உள்ள மடுமாதாபதி இவைகள் எல்லாம் அன்னையின் புகழ்பாடும் குறிப்பிடத்தக்க யாத்திரைத் தலங்களாகும். மடுப்பதியின் வரலாறு நான்கு நூற்றாண்டுகளுக்கு மேல் பழைமைவாய்ந்தது. 16ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியான 1670ஆம் ஆண்டு கிறிஸ்தவர்களுக்கு எதிரான வேத காலாபனை நடைபெற்றுக் கொண்டிருந்தது. மன்னார் மாந்தையில் வாழ்ந்த 20 கத்தோலிக்கக் குடும்பங்கள் தங்கள் பாதுகாவலியான செபமாலை அன்னையின்



மடுத்தாயின் அருட்கருணை
எல்லோருக்கும் கிடைத்திட
பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் எண்ணங்களை தங்க
நகைகளாக்கி அழகுக்கு மேல் அழகு
சேர்க்கும் ஆபரணங்களை ஓடர்
மூலம் குறித்த தவணையில் செய்து
பெற்றுக்கொள்ள

**பொற்பரிதி நகையகம்**

துணுக்காய்சாலை, மல்லாவி. (சி-12441)




கானகம் வாழும் காரிகை தேவதாய்
காலைப் பீடிப்பவர் காரிருள் நீங்கிடும்
என்று நம்பி என்றும் வாழும்
உங்கள் குறைகள் அகன்றிட பிரார்த்திக்கின்றோம்.

மல்லாவி நகரில்
அழகிய தங்க நகைகளைப்பெற்றிட
இன்றே நாடுங்கள்

**மாணிக்கப்பிள்ளையார் நகைப்பூங்கா**

துணுக்காய்சாலை,
மல்லாவி. (சி-12442)
தொ.பேசி:
0712-348783




மருதமடு அன்னையின் அருள் நம்
எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்...
புதிய கணனிகள் கொள்வனவு ...
புதிய போட்டோக்கொப்பி இயந்...
புதிய லமினேற்றிங் மிசின் கொள்...
புதிய இன்ரகொம், நெற்வேக் வச...
உடன் நாடுங்கள்

**நொதேன் ரெக்னோ...**
**NORTHERN TEC...**

மன்ன...

வவுனியாவில்:
இல.52,
2ஆம் குறுக்குத் தெரு,
புறக்கண்டிவீதி,
வவுனியா.-
T.P:- 024-2221649

யாழில்:
இல.20,
கன்னாதிட்டிவீதி,
யாழ்ப்பாணம்.
T.P:- 021 - 2225653

புதிய செப...
சின்னக்கடை...
மன்னார்.


(சி-12443)

கணனிஉல...

# ஆவணிப் பெருவிழா

# – 15.08.2005

# மருதமடு அன்னையின் யாத்திரைத்தலம்



திருச்சொரூபத்தைப் பாதுகாப்பதற்காக அடர்ந்த காட்டுப்பிரதேசமான மடுவிற்குக் கொண்டு வந்தனர். அன்றைய தினமே மடுப்பதியின் வரலாறு ஆரம்பமானது.

1695ஆம் ஆண்டு கோவைக் குருக்கள் முத்திப்பேறு பெற்ற ஜோசவ்வாஸ் முனிவரின் தலைமையில் மடுப்பதியைப் பொறுப்பேற்றனர். பாழடைந்து கிடந்த ஆலயத்தை திருத்திக் கட்டி புதுமெருகூட்டி திருநாட்களை மிகவும் சிறப்பாக கொண்டாடத் தொடங்கினர். 1705ஆம் ஆண்டுத் திருவிழாவில் முத்திப்பேறு பெற்ற ஜோசவ்வாஸ் அடிகள் பங்குபற்றினார் என்று கூறப் படுகிறது. 1823இல் மண்ணால் கட்டப்பட்ட குடிசைக் கோயிலே இன்று அன்னையின் புதுமைகளாலும், யாத்திரீகர்களின் வருகையாலும் இலங்கை வாழ் மக்கள் அனைவரையும் இணைக்கும் மடுப்பதியாக கம்பீரமாக உயர்ந்து காட்சியளிக்கின்றது. ஆயர் யூலன் ஆண்டகையின் காலத்தில் யாழ்ப் பாண மக்கள் மத்தியில் தேவதாயின் மீது விசேட பக்தி வளர்ந்தது எனலாம். மடுத்தாயின் மேல் விசேட பக்தி கொண்ட அவர் மடுப்பதியில் வருடாந்தத் திருவிழாக்களில் தாமே தலைமை வகித்தும் மாலை வழிபாடுகளில் பிரசங்கமும் செய்துவந்தார். இதனால் மடு அன்னை மேல் பக்தியும் மடுயாத்திரை செய்வதில் விருப்பமும் உடையவர்களாக யாழ் மக்கள் மாறினர்.

மடுத்தாயின் மேல் யாழ்ப்பாண மக்கள் கொண்ட அளவற்ற பக்தியால் எல்லோருக்கும் மடுத்தாயின் தரிசிப்பைக் கொடுக்க வேண்டும் எனக்கருதி 1895இல் யாழ்ப்பாணத்தில் தீவுப்பகுதியில் சின்னமடு யாத்திரைத்தலம் தொடங்கப்பட்டது. ஆவணி மாதம் 05ஆம் திகதியில் சின்னமடு திருவிழா சிறப்பாகக் கொண்டப்படுகிறது. கானகத்தில் வாழும் மருதமடு அன்னையிடம் யுத்தகாலத்தில் போக முடியாத யாழ் மக்கள் தீவுப்பகுதி சின்னமடு அன்னையிடமே கூடி வந்தனர்.

ஆயர் யூலன் ஆண்டகையைத் தொடர்ந்து யாழ் மறைமாவட்டத்தை நிர்வகித்த ஆயர், மடுத்தாய் மட்டில் விசேட பக்தி கொண்டிருந்தார். சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த மடுமாதா சொரூபத்திற்கு திருச்சபையின் தலைவரால் முடி சூட்டுவிக்க அவர் பெரிதும் ஆசைப்பட்டு ஆயத்தங்கள் செய்தார். எதிர்பாராத விதமாக பெய்த பெரும் மழையும், யாத்திரிகர்களுக்கு நீர் அளிக்கும் குளத்தின் அணைக்கட்டு உடைந்ததாலும் திருநாள் தடைப்பட்டது. அடுத்த ஆண்டும் பெய்த பெரும் மழையாலும் ஆலய முகப்பு இடிந்து விழுந்தது. இதனால் முடிசூட்டும் நிகழ்வும் தடைப்பட்டது. மடுப்பதியின் 300 ஆம் வருட நிறைவைக் சிறப்பாகக் கொண்டாடிய இவர் திடீரென இறந்துபோனார்.

ஆயர் அல்பிரெட் கியோமர் ஆண்டகை மடு அன்னைக்கு முடிசூட்டும் வைபவத்தை தன் ஆழுகையுடன் ஆரம்பித்தார். 1924ஆம் ஆண்டு ஏறக்குறைய ஒன்றரை இலட்சம் மக்கள் கலந்து கொண்ட ஒரு விழாவில் பாப்பரசரின் பிரதிநிதி பேராயர் அந்தோணி சுடேர் மடுமாதாவிற்கு மணிமுடி சூட்டினார். 1948ஆம் ஆண்டு முதல் தடவையாக மடுமாதா திருச்சொரூபம் யாழ் மறைமாவட்டம் முழுவதும் பவனியாக எடுத்துவரப்பட்டது. 1796இல் மாதோட்டம் பகுதியில் பரவிய கொள்ளை நோயைத் தடுக்குமாறு மடு அன்னையின் திருச்சொரூபம் மாதோட்டம் பகுதி ஊர்கள் தோறும் கொண்டு செல்லப்பட்டது. 1948ஆம் ஆண்டு மருதமடு அன்னையின் முடிசூட்டு விழாவின் வெள்ளி விழா கொண்டாடப்பட்டது.

1949ஆம் ஆண்டு ஆயர் எமிலியானுஸ் ஆண்டகை ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார். இவரின் ஆளுகையில் மடுப்பதி மேலும் வளர்ந்தது. யாத்திரீகர் வசதிக்காக பல ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டன. 1974ஆம் ஆண்டு ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை காலத்தில் முடிசூட்டு விழாவின் பொன்விழா கொண்டாடப்பட்டது. பொன்விழாக் கொண்டாட்டங்களை மறைந்த கொழும்புப் பேராயர் மேதகு தோமஸ்கூரே ஆண்டகை நிகழ்தினார். முடிசூட்டு விழாவின் பொன்விழா நினைவாக அன்னையின் திருச்சொரூபம் யாழ் மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளுக்கும் யாத்திரையாக எடுத்துவரப்பட்டது. 1981ஆம் ஆண்டு யாழ் மறைமாவட்டத்தில் இருந்து மன்னார் மாவட்டம் பிரிக்கப்பட்டபோது மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அதன் முதல் ஆயராக மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை மடுப்பதியிலேயே ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார். 1993ஆம் ஆண்டு ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை மன்னார் ஆயரானார். மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை யாழ் மறைமாவட்டத்திற்கு மாற்றப்பட்டார். 1999ஆம் ஆண்டு நவம்பர் 20ஆம் திகதி மடு மாதா ஆலயம் ஆட்லறி தாக்குதலுக்கு இலக்கானது. அகதிகளாக தஞ்சம் புகுந்திருந்த 37பேர் கொல்லப்பட்டனர். 64 பேர் காயமடைந்தனர்.

தேவ அன்னை மடுத்தாய் நமக்கெல்லாம் ஒரு அன்னையாக விளங்குகிறாள். இன மத பேதமின்றி அனைவருக்கும் அன்புக் கரம் நீட்டும் தாயிடம் தடைப்பட்டு போயுள்ள பேச்சுவார்த்தை மீளத்தொடங்கவும் கேள்விக் குறியாய் உள்ள பொதுக் கட்டமைப்பு ஓர் இணக்கத்திற்கு வரவும் அதன் வழி மக்களுக்கு நீதியோடு கூடிய தீர்வும், நிரந்தர சமாதானமும் கிடைக்க வேண்டுவோமாக.

**-அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை-**

சிறப்பிதழாக்கம்
காரையூரான்


மடுத்தாயின் அருட்கருணை
நம் எல்லோருக்கும் கிடைத்திட
பிரார்த்திக்கின்றோம்.

பலசரக்குப்பொருட்கள், அழகுசாதனப்பொருட்கள்,
கிருமிநாசினிகள் விற்பனையாளர்

மருதடிப்பிள்ளையார் களஞ்சியம்

துணுக்காய்சாலை, மல்லாவி. (சி-12449)

உலகை ஆளும் மருதமடு மாதாவே!
எங்களை தினம் காத்திடம்மா!
டீசல் இஞ்சின் உதிரிப்பாகங்கள்,
அரைக்கும் ஆலை உபகரணங்கள்,
வாகனஉதிரிப்பாகங்கள் விற்பனையாளர்

பிள்ளையார் பல்பொருள் உதிரிகள் வாணிபம்

யோகபுரம், மல்லாவி. (சி-12448) 308,கந்தசாமி கோவில் முன்பாக, கிளிநொச்சி.

தமிழ் மக்கள் அனைவரும்
நீதியோடு கூடிய நிரந்தரத்தீர்வுடன்
சுதந்திரமாக வாழ அன்னையிடம்
அருள் வேண்டுவோம்.

மல்லாவி நகரிலும் கிளிநொச்சி நகரிலும்
புடைவை வகைகள் விற்பனையில் முன்னோடிகள்

முத்துப்பிள்ளையார் வண்ணச்சோலை

யோகபுரம், மல்லாவி. யாழ்சாலை, கிளிநொச்சி. (சி-12447)

தேங்கிய துயரினை நீக்கிடும் அம்மா-
இன்று ஊரிலே உன்னோடுநிற்கின்ற
மக்கள்-அவர் உள்ளத்தில் பேரொளி
அருளிடு அம்மா!
கட்டடப்பொருட்கள் வீட்டுத்தளபாடங்கள்.உரவகைகள்
துவிச்சக்கரவண்டி.உந்துருளி உதிரிப்பாகங்கள்.
எரிபொருள் வகைகள் விற்பனையாளர்கள்.

மருதடி அம்மன் பல்வகை வாணிபம்

துணுக்காய்சாலை, மல்லாவி. (சி-12446)

மருதமடு மாதாவே!
நாங்கள் பட்ட அவலமெல்லாம்
நீங்கட்டும் எங்கும் அன்புச்சுனை
பெருகட்டுமென வேண்டுகின்றோம்.

மடுத்தாய்
பல்பொறி உதிரிகள் வாணிபம்

யாழ்சாலை, கிளிநொச்சி. (சி-12445) தொ.பேசி: 021-228 5929

...கின்றோம்.
...செய்யவேண்டுமா?
...திரங்கள் கொள்வனவு செய்யவேண்டுமா?
...வனவு செய்யவேண்டுமா?
...திகள் உங்கள் நிறுவனத்திற்கு செய்யவேண்டுமா?

...லஜி பிரைவேட் லிமிட்டெட்
...HNOLOGY(PVT)LTD.
...ரில்:
...தியார்வீதி,
கிளிநொச்சியில்:
PC Vanni Informatics
திருநகர் தெரு,கிளிநொச்சி.
...கின் காட்சிப்பெட்டகம்.

கானகம் வாழும் காரிகை தேவதாய் காலைப் பிடிப்பவர் காரிருள் நீங்கிடும்
என்று நம்பி என்றும் வாழும் உங்கள் குறைகள் அகன்றிட பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்,
பணியாளர்கள்

நானாட்டான் பகுதி ப.நோ.கூ. சங்கம்

பிரதான வீதி, முருங்கன். தொ.பே-023-223 3010


எமது சங்க சேவைகள்:-
- நுகர்ச்சி எரிபொருள்
- கிருமிநாசினிவகைகள்
- பிரதிஒளியியல்
- விவசாய உள்ளீடுகள்
- வாடகைச்சேவை
- அந்திம கால சேவை
- விதைநெல், கைத்தொழில் அபிவிருத்தி
- விவசாய உபகரண வாடகை,திருத்தல் நிலைய சேவை (சி-12444)

ஆகிய தொழிற்பாடுகள்
மூலம் எம் மாவட்டத்திற்கு
நிறைவான தரமான
நியாயமான சேவைகளை
வழங்கி வருகின்றோம்.

# அதிகாரத்திற்கு சவாலாகும் சறுக்கல்கள்!

எந்த ஒரு நாட்டிலும் சனநாயகத்துக்கு எதிரான முறையில் தேர்தலைப் பின்போடுவது, தேர்தலில் மோசடி செய்வது, எதிர்க்கட்சியினரை மட்டுப்படுத்துவது போன்ற சம்பவங்கள் நடைபெற்றாலும் மக்கள் நீதிதேவதையாகக் கருதும் வெளிநாட்டு சனநாயக பிரஜைகளின் உதவியைப் பெறுவது வழக்கமாகும்.

அந்தவகையில் 1983 ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜயவர்த்தன ஜே.வி.பியை தடைசெய்தபோது அதனைத் தடுக்க ரோகண விஜேவீர சர்வதேச மத்தியஸ்தத்தின் துணையை வேண்டி நின்றார். அக்கட்சிக்கு அப்போது தடைவிதித்தபோது அது சனநாயக விரோதச் செயல் என விஜேவீர ஐக்கியநாடுகள் சபையிடமும், அமெரிக்காவிலுள்ள சர்வதேச



மன்னிப்புச் சபையிடமும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடமும் முறையிட்டு அதனைத் தடுக்குமாறு கோரினார்.

1988 - 89 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தற்போதைய ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க உள்ளிட்ட அங்கத்தவர்களுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டபோது அதிலிருந்து தப்ப அவர்கள் சர்வதேச உதவியைப் பெறப்போய் உள்நாட்டுப் பிரச்சினையில் வெளிநாடுகளின் தலையீடு ஏற்பட்டுவிடும் என்று அஞ்சி அவர்களுக்கு மரணதண்டனை வழங்கப்படவில்லை. அத்துடன் அன்று சிறிலங்காவை பிணந்தின்னிகளின் நாடாகக் கருதிய ஜே.வி.பி யினர் பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி போன்ற ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்பைக்கோரி அங்கு அரசியல் தஞ்சம் அடைந்தனர். அவர்களுக்கு புகலிடம் வழங்கியதாலேயே ஜே.வி.பி என்ற ஒரு அரசியல் கட்சி இன்று தலைதூக்கி நிற்கின்றது.

ஜே.வி.பி மட்டுமன்றி சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் அன்று எதிர்க்கட்சியிலிருந்து ஜே.ஆரின் கட்சியும், பிரேமதாசாவின் கட்சியும் கொலை செய்வதாகக் கூறி சர்வதேச சமூகத்தின் மத்தியஸ்தத்தைக் கோரியிருந்தது. பிரேமதாசாவின் ஆட்சியின்போது தற்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பரிஸில் நடைபெற்ற உதவி வழங்கும் மாநாட்டுக்கு சென்று கொலை செய்யும் நாட்டுக்கு உதவியளிக்க வேண்டாம் என ஆர்ப்பாட்டம் செய்த[illegible]ார். அத்துடன் எதிர்க்கட்சியிலிருந்த சிறிமா பண்டாரநாயக்க அம்மையாரும் மங்கள சமரவீர, மகிந்த ராஜபக்ஷவும் அப்போது காணாமல் போன பிள்ளைகளின் பெற்றோர் சங்கத்தின் மூலம் சர்வதேச சமூகத்திடம் இதனையே எழுத்து மூலம் வலியுறுத்தினார்.

1991 ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலின்போது பிரிட்டிஷ் தூதுவர் அந்தத் தேர்தலில் மோசடி நடைபெற்றதாகத் தெரிவித்தபோது அவரைப் பாதுகாக்கவென சிறிலங்கா சுதந்திரக்கட்சி முன்வந்து சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்து சனநாயகத்தைப் பாதுகாக்க நினைத்தது. 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலின் போதும் அதனைச் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் நடத்த சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டுமென சிறிலங்கா சுதந்திரக்கட்சி கோரிக்கை விடுத்தது.

பல வருடங்களாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து அநுரா பண்டாரநாயக்க சிறிலங்காவின் சனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக் ில் ஐ.தே.கட்சியின் நடவடிக்கைகளில் பிரதான பங்கு வகித்தார். அதன்படி சனநாயகவாதிகளின் கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போது தனது சகோதரியான சந்திரிகா பண்டாரநாயக்கவிடம் இருந்து சனநாயகத்தைப் பாதுகாத்துத் தருமாறு வேண்டுகோள் விடுத்தார். அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற அந்த சம்மேளனத்தின்கூட்டத்தின் போது சிறிலங்காவில் நியாயமான, சுதந்திரமான தேர்தல் நடைபெறுவதை உறுதிப்படுத்துமாறும் கோரினார்.

அதேபோன்று 2000 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலைக் கண்காணிக்கவென வெளிநாட்டு மத்தியஸ்தம் வேண்டுமென அநுரா கோரியபோது பொதுத்தேர்தல் போன்ற சிறிலங்காவின் உள்விவகாரங்களில் வெளிநாடுகள் தலையிடக்கூடாது என ஜே.வி.பி அன்று கூறவில்லை. ஜே.வி.பி ஐ.தே.கட்சியின் கோரிக்கைக்கு ஆதர வளிக்கும் வகையில் செயற் பட்டது.


காரணம் இவ்வாறு தேர்தலில் ஊழல் நடைபெற்றால் அதனை தவிர்க்க உதவுவது வெளிநாட்டு பிரதிநிதிகளின் கண்காணிப்பே.

அன்று அநுரா தேர்தலுக்கான வெளிநாட்டு உதவியைக் கோரியது போன்று தானும் உதவிபெறும் நோக்கிலேயே ரணில் அண்மையில் வெளிநாடுகளுக்கு சென்றார்.

அவரது நோக்கம் 2005 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் சனாதிபதித்தேர்தல் என்ற பெரும் சவாலாகும். இது அவரது நீண்டகால நோக்கமாகும். எனினும் அதற்கு முன்பு அவர் தனது கட்சியையும் ஆதரவாளர்களையும் ஒன்றிணைக்க வேண்டியிருந்தது. வோஷிங்டனில் நடைபெற்ற இச்சம்மேளனத்து முன்பதாக அவர் மக்கள் சக்தி என்ற எழுச்சிப் பேரணியை ஆரம்பித்தது இதற்காகவே. அவர் வோஷிங்டன் சம்மேளனத்துக்கு புறப்பட்ட நிலையில் மக்கள் சக்திப் பேரணியும் வெற்றிகரமாக முடிந்து அது சம்மேளனத்தில் ஒலிக்கப் படுவதற்கேற்ற வழிகளையும் அவர் செய்து முடித்திருந்தார்.

அதேபோல் இங்கு நடைபெற்ற மக்கள் சக்திப் பேரணி பற்றிய அறிக்கை சம்மேளனத் தலைவர்களையும் விசேடமாக அமெரிக்காவின் குடியரசுக் கட்சித் தலைவரான ஜோர்ஜ் புஷ்சையும் சென்றடைந்திருந்தது.

ரணில் விக்கிரமசிங்கவின் முன்னைய அரசாங்கம் கவிழ்ந்ததும் அவர் அமெரிக்கா அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷைச்சந்திக்கச்சென்ற சமயத்திலாகும். பொதுவாக அமெரிக்கத தலைவர் ஒருவரை சந்திப்பது சுலபமான காரியமல்ல. சந்திரிகா சனாதிபதியாகப் பதவியேற்ற 1994 முதல் இன்று வரை அமெரிக்க அதிபரை சந்திக்கப் பலதடவைகள் முயற்சி எடுத்தும் அது கைகூடவுமில்லை. அதுபோல் 2004 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் வருடாந்த கூட்டத்தின் போதும் சந்திரிகா, ஜோர்ஜ் புஷ்ஷைச் சந்திக்க முயன்றார். அப்போது அநுராபண்டார நாயக்கவையும் அழைத்துச் சென்றார். புஷ் தங்கியிருந்த விடுதியிலேயே இருவரும் தங்கினர். எனினும் சந்திப்பு நடைபெறவில்லை. நாட்டின் தலைவர் என்ற சந்திரிகாவை சந்திக்க வாய்ப்பளிக்காமல் 2001 ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றிபெற்று பிரதமரான ரணில் விக்கிரமசிங்கவை இருமுறை சந்தித்தமை பற்றி பத்திரிகைகள் விமர்சித்தன.சிறிய ஒருநாடான சிறிலங்காவை உலக அரங்கில் அமெரிக்கா ஒரு பொருட்டாக நினைக்காத நிலையில் ரணில் இரண்டுமுறை சந்தித்தமை தொடர்பில் பல விமர்சனங்கள் தோன்றின.



நன்றி - லங்காதீப

ரணில் விக்கிரமசிங்க மூன்றாவது தடவை அமெரிக்கா சென்றிருந்த நிலையில் மூன்று அமைச்சுக்களையும் சந்திரிகா சுவீகரித்ததன் மூலம் மேலும் புஷ்ஷின் அனுதாபத்தைப் பெற்றுக் கொண்டார். அதிலிருந்து சந்திரிகா சனநாயகத்தைப் பறித்துவிட்டார் என்றும், புஷ் சனாதிபதி என்ற வகையில் தான் ரணில் விக்கிரமசிங்கவின் பின்னால் நிற்பதாகவும் கூறினார்.

எனினும் நாடு திரும்பிய ரணில் அதன் பின்னர் தேர்தலிலும் தோல்விகண்டார். அதனால் ரணிலின் தோழர் புஷ் எங்கே என்றும் சிலர் வினாவெழுப்பினர்.

ஆனால் புஷ் ரணிலை கைவிடவுமில்லை. ரணில் புஷ்ஷைக் கைவிடவுமில்லை. கடந்த ஆண்டு சுனாமி அனர்த்தம் ஏற்பட்டதும் புஷ் தனது படைகளையும் உதவிப் பொருட்களையும் அனுப்பியது ரணிலில் வைத்திருந்த நம்பிக்கையின் நிமித்தமாகவே.

அத்துடன் கூட்டணி பிளவுபட்டுள்ள நிலையிலும் மக்கள் சக்தி மூலம் ரணில் பலம் பெற்றுள்ள நிலையிலும் சர்வதேச சனநாயக சம்மேளனத்தின் ஆசிய பிராந்தியத் தலைவராக ரணிலையே புஷ் தெரிவு செய்துள்ளார். ஆளும் கட்சித் தலைவியான சந்திரிகா பல முறை முயன்று சந்திக்க முடியாத நிலையில் ரணில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து பல முறை புஷ்ஷைச் சந்தித்திருக்கும் நிலையில் இவ்வருடம் சனாதிபதித் தேர்தல் ஒன்று இந்நாட்டில் நடைபெறவிருக்கின்றது. இவ்வருடம் சனாதிபதித்தேர்தல் நடைபெறாவிட்டாலும் சர்வதேச சமூகம் அது தொடர்பாக சனநாயகரீதியில் அழுத்தத்தைப் பிரயோகிக்கலாம். ஈராக் சனாதிபதி சதாம் ஹுசைனுக்கு நடந்ததை நோக்குமிடத்து சிறிலங்காவிலும் அவர்களது அதிகாரத்துக்கு சவால் விடுக்க முடியுமா என்பதை நினைத்துப் பார்க்கவும் முடியாது.

**உப்புள் ஜோசப் பர்னாந்து**
**(லங்காதீப)**
**தமிழில் - வடிவேல்**

---

## சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேர ஜே.வி.பி. புதிய ஆலோசனைகள்

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தல்களில் ஒன்றிணைந்து போட்டியிடுவது சம்பந்தமாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஜே.வி.பிக்கு இடையே உத்தியோகபற்றற்ற வகையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரு சாராரும் மீண்டும் ஒன்றிணைந்து தேர்தலில் போட்டியிடுவதாயின் புதிய கூட்டமைப்பொன்றை ஏற்படுத்தி புதிய உடன்படிக்கையொன்றை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே தமது நிலைப்பாடென ஜே.வி.பி சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு அறிவித்துள்ளது எனக் கூறப்படுகிறது.

அத்துடன் கூட்டமைப்பின் பழைய கொள்கைகளுக்கு பதிலாக புதிய கொள்கைகள் தயாரிக்கப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. இரு கட்சிகளும் கூட்டிணைவது எனில் அரச சொத்துக்கள் தனியார்மயமாக்கல், ஆழிப்பேரலை நிவாரண சபை மற்றும் வடக்கு- கிழக்கு பிரச்சினை தொடர்பாக இரு தரப்பினதும் கருத்துக்கள் ஒரே விதமாக இருக்க வேண்டும் என்பதே ஜே.வி.பி யின் கருத்தாகும். அத்துடன் புதிய கூட்டமைப்பின் தலைமைத்துவம் பற்றியும் ஜே.வி.பி யினர் தமது கருத்துக்களை தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும் இந்த விடயங்கள் தொடர்பான சனாதிபதியின் கருத்துக்கள் பற்றி தமது கட்சி அவதானம் செலுத்தும் என்றும் ஜே.வி.பி சிறிலங்கா சுதந்திரக் கட்சியிடம் கூறியுள்ளது.

---

## அரசியலமைப்பு சபைக்கு முஸ்லிம் பிரதிநிதிகள் நியமனத்தில் தாமதம்

அரசியலமைப்புச் சபைக்கு முஸ்லிம் பிரதிநிதிகளை நியமிப்பதில் காலதாமதம் ஏற்பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. அரசியலமைப்புச் சபைக்கான பிரதிநிதிகளை நியமிக்கும் பொறுப்பு பிரதமர் மகிந்த ராஜபகஷவிடமும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடமும் வழங்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் அரசியலமைப்புச் சபையில் முஸ்லிம் பிரதிநிதிகளாக முன்னாள் சவூதிஅரேபியாவுக்கான சிறிலங்காத் தூதுவர் ஜாவிட் ஜுசவ், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் எம்.எல்.ஏ.காதர், ஆகியோரின் பெயர் முன்மொழியப்பட்டிருந்தது. எனினும், இதுவரை தேர்தல் ஒன்றிலும் போட்டியிடாத ஜாவிட் ஜுசவை அரசியலமைப்புச் சபையின் பிரதிநிதியாக நியமிப்பதற்கு முஸ்லிம் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. முஸ்லிம்கள் விவகார அமைச்சர் காதர் கூட இதற்குஎதிர்ப்புத் தெரிவித்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்நிலையில் அரசியலமைப்புச் சபைக்கு முஸ்லிம் பிரதிநிதிகளை நியமிப்பது குறித்து பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும், எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவும் முஸ்லிம் கட்சித் தலைவர்களுடன் இந்த விடயம் குறித்துப் பேச்சுவார்த்தை நடாத்துவதற்குத் தீர்மானித்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.




**04.08.2005**
**10.08.2005**

### 04.

□ ஈராக்கில் பர்வானாப் பிரதேசத்தில் இடம்பெற்ற வீதியோரக் குண்டுத்தாக்குதலில் 14 அமெரிக்கக் கடற்படையினரும், ஒரு மொழி பெயர்ப்பாளரும் கொல்லப்பட்டனர்.


சம்பவ இடத்தில் தேடுதல்

□சூடான் துணை சனாதிபதி உலங்கு வானூர்தி விபத்தில் மரணமடைந்ததைத் தொடர்ந்து சூடானில் கலவரம். இதுவரை 100 பொதுமக்கள் உயிரிழப்பு.

### 05.


□ சீனாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் "மெக்ஸா" என்ற சூறாவளி தாக்கியதில் சுமார் இரண்டுகோடி மக்கள் இடம் பெயர்வு.

### 06.



□ யப்பானின் ஹிரோஷிமாவில் அணுகுண்டு வீசப்பட்டதன் அறுபதாவது ஆண்டு நிறைவு நாள் அனுஷ்டிக்கப்பட்டது. பெருமளவான மக்கள் அஞ்சலி செலுத்தினர்.


□இத்தாலியிலிருந்து பயணிகளை ஏற்றிச் சென்ற துனிசியா நாட்டு விமானம் ஒன்று இயந்திரக் கோளாறு காரணமாக மகா சிசிலியன் தீவுப்பகுதியில் கடலில் தரையிரங்கும் போது விபத்துக்குள்ளானதில் 19பேர் பலி. மூன்று பேர் காணாமல் போயினர்.



□ரஷ்ய எல்லைக்குட்பட்ட பசுபிக் பெருங் கடலிலுள்ள கம்சட்காத் தீவில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த "ஓ.எஸ்.28 பிரிஸ்" என்ற சிறிய நீர்மூழ்கிக்கப்பல் கடலில் போடப்பட்ட வலையில் சிக்கியது.

### 07.

□ படையினருடன் கடலுக்கடியில் மீன்பிடி வலையில் சிக்கிய கப்பல் மீட்பு.



□நேபாளத்தின் வடமேற்குப்பகுதியில் உள்ள இராணுவ முகாம் மீது மாவோ கிளர்ச்சி வாதிகள் நடத்திய தாக்குதலில் 150 இற்கும் மேற்பட்டோர் பலி,



□ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் மணற்புயற்காற்று வீசியதன் காரணமாக சுமார் ஆயிரம் பேர் பாதிப்பு.

□தென்சீனாவிலுள்ள நிலக்கரிச் சுரங்கமொன்றுக்குள் ஒரு பகுதியில் ஏற்பட்ட சரிவால் 103 தொழிலாளர்கள் சிக்குண்டனர்.

□சென்னையில் பழைய இரும்புப்பொருட்களை உருக்கும் கடையில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் ஒருவர் பலி, நான்குபேர் காயம்.


### 08.

□யப்பானின் கிழக்குப்பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவுகோலில் 5.5 புள்ளியாகப் பதிவானது.

### 09.

□யப்பானின் நாகசாகி நகர் மீது அமெரிக்கா அணுகுண்டுத் தாக்குதல் நடத்தியதன் அறுபதாவது ஆண்டு நினைவுதினம் அனுஷ்டிப்பு.

□அமெரிக்காவுக்குச் சொந்தமான டிஸ்கவரி விண்கலம் வெற்றிகரமாகத் தரையிறங்கியது.



### 10.

□ஆப்கானில் அமெரிக்கப்படையினருக்கு உளவு பார்த்த பெண்ணொருவர் தலிபான் தீவிரவாதிகளால் சுட்டுக்கொலை.

□ஈராக் உள்துறை சிரேஷ்ட அதிகாரி ஒருவர் பாக்தாத்தில் வைத்து தீவிரவாதிகளால் கடத்தல்.

-மேல் கொத்மலைத் திட்டத்திற்கெதிரான-

# சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்திற்கு அனைத்து தரப்பினரின் ஆதரவும் கோரல்

(கண்டி)

மேல் கொத்மலை திட்டத்திற்கு எதிராக மலையக இளைஞர்கள் முன்னெடுத்துள்ள சாகும் வரையிலான உண்ணா நோன்புப் போராட்டத்திற்கு மலையகத்தின் அனைத்து தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் உப தலைவர் கணபதி கனகராஜ் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

மலையகத்தின் அனைத்துத் தரப்புகளும் இந்தத் திட்டத்தினை எதிர்த்திருக்குமாக இருந்தால் அதனை அரசாங்கம் முன்னெடுத்திருக்காது.

இந்த நிலையில் தற்சமயம் முன்னெடுக்கப்பட்டுள்ள இளைஞர்களின் போராட்டமானது மோசமான நிலையை உருவாக்குமானால் அது மலையகத்தில் சனநாயக நம்பிக்கையை இழக்கச் செய்துவிடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆறு இளைஞர்களின் சாகும் வரையிலான உண்ணா நோன்புப் போராட்டம் நீராகாரமும் இன்றி தொடரும் நிலை யில் நேற்று முன்தினம் அங்கு உரை யாற்றிய போதே கணபதி கனகராஜ் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

# வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கையில் சனாதிபதித்தேர்தல் திகதியை அறிவிக்க முடியுமா?

-தேர்தல் ஆணையாளர் சட்டமா அதிபரிடம் ஆலோசனை

(கொழும்பு)

சனாதிபதித்தேர்தல் நடைபெறும் தினம் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் இருக்கையில் தேர்தல் நடைபெறும் திகதியை அறிவிக்க சட்டரீதியாக இடமுள்ளதா? எனத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க சட்டமா அதிபரை வினாவியுள்ளார்.

சனாதிபதித்தேர்தலை இந்த ஆண்டு நடத்துமாறு தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிடுமாறுகோரி ஜாதிகஹெல உறுமய உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ள நிலையில் சனாதிபதித்தேர்தல் தொடர்பான திகதியை அறிவிக்க தனக்கு சட்டரீதியாக இடமுள்ளதா? என தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க சட்டமா அதிபரிடம் ஆலோசனை கேட்டுள்ளார் என சட்டமா அதிபர் திணைக்கள வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மனுவிற்கு அமைய உயர்நீதிமன்றம் தனக்குத் தடையுத்தரவு எதனையும் விதிக்கவில்லையென தேர்தல் ஆணையாளர் சட்டமா அதிபருக்கு அனுப்பியிருக்கும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

அதன்படி தனக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களுக்கமைய எதிர்வரும் சனாதிபதித்தேர்தல் நடைபெறும் திகதி தொடர்பாக அறிவிக்க தனக்குத் தடையேதும் உள்ளதா என அறியத்தருமாறு தேர்தல் ஆணையாளர் கேட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

எதிர்வரும் இருபதாம் திகதிக்குப் பின்னர் அடுத்த சனாதிபதித்தேர்தல் எப்போது நடைபெறும் என தான் அறிவிக்கப்போவதாக தேர்தல் ஆணையாளர் இதற்கு முன்னர் அறிவித்திருந்தார். அதன் பின்னரே ஜாதிகஹெல உறுமய இந்த ஆண்டிற்குள் சனாதிபதித்தேர்தல் நடத்தப்படவேண்டுமென உத்தரவிடுமாறுகோரி உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தது.

அதன் பின்னர் மனுவொன்றைத் தாக்கல் செய்த சிறிலங்கா சுதந்திரக்கட்சி அடுத்த சனாதிபதித் தேர்தலை 2006 இல் நடத்துவதற்கு உத்தர விடுமாறு கோரியிருந்தது.

# கதிர்காமரின் கொலை;— போர்நிறுத்தத்தைப் பாதிக்காது

*-சமாதான செயலகப் பணிப்பாளர் ஜெயந்ததனபால*

(கொழும்பு)

அமைச்சர் கதிர்காமரின் கொலையானது போர் நிறுத்த உடன்பாட்டின் ஏ 1.2 என்ற பந்தியை பொறுத்த வரையில் மீறல் செயலாகும். எனினும் அரசாங்கம் போர் நிறுத்த உடன்பாட்டில் இருந்து விலகிச்செல்லாது என சிறிலங்காவின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜெயந்ததனபால தெரிவித்துள்ளார். (32)

# 800 இலட்சம் ரூபா செலவில் மகிந்தவுக்கு சுவரொட்டிகள்!

(கொழும்பு)

சனாதிபதி வேட்பாளராகப் பிரதமர் மகிந்தராஜபக்ஷ நியமிக்கப்பட்ட பின் நாடு முழுவதும் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளுக்காக 800 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சனாதிபதித்தேர்தலொன்று அறிவிக்கப்படுவதற்கு முன்னதாக சனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட்டதற்காக சுவரொட்டி ஒட்டுவதற்காக சிறிலங்காவின் அரசியல் தலைவர் ஒருவர் இவ்வளவு பெரும் தொகையைச் செலவுசெய்த முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சனாதிபதி வேட்பாளராக மகிந்தராஜபக்ஷ அறிவிக்கப்பட்ட மறுதினத்திலிருந்து அவருக்கு ஆதரவு தெரிவித்தும் அவருக்கு பிரச்சாரத்தை ஏற்படுத்திக் கொடுக்கவும் நாடு முழுவதும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு வருகின்றன.

# போலி ஆவணங்களுடன் கடவுச்சீட்டு பெறமுயல்வோரை கைதுசெய்ய ஏற்பாடு

(கொழும்பு)

போலி ஆவணங்களைப் பயன்படுத்தி கடவுச்சீட்டுப் பெறுவோரைக் கைதுசெய்ய சிறிலங்கா பொலிசார் விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந் நபர்களைக் கைது செய்வதற்காக பொலிஸ் மோசடிப் பிரிவு அதிகாரிகள் குழுவொன்று கடவுச்சீட்டு விநியோகிக்கும் காரியாலத்தில் செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை போலி ஆவணங்களைப் பயன்படுத்தி கடவுச்சீட்டுப்பெற முயன்ற நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மேலதிக விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

# ரணில், மகிந்த ராஜபக்ஷவுக்கு பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் சனாதிபதித்தேர்தலில் போட்டியிடும் பிரதான இரு அரசியல் கட்சிகளினது வேட்பாளர்களினதும் பாதுகாப்பைப் பலப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் தற்போது இருக்கும் பாதுகாப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த தேர்தல்களின்போது இடம்பெற்ற சம்பவங்கள் மற்றும் அவற்றைத்தடுக்க எடுக்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் என்பன குறித்துக் கவனம் செலுத்தப்பட்ட பின்னரே பிரதமரினதும்,எதிர்க்கட்சித் தலைவரினதும் பாதுகாப்பைப் பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# கடும் மழையால் அறுவடை பாதிப்பு

கடந்த வெள்ளிக்கிழமை பெய்த கடும் மழை காரணமாக அம்பாறை மாவட்ட கரவாகுவட்டை நெற் செய்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அறுவடை நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் மழை பொழிந்ததனால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். அறுவடைசெய்த வேளாண்மையை இயந்திரப் படகுகளிலும், தோணிகளிலும் கரைசேர்க்கின்றனர். ஏற்கனவே தொழிலாளர்களுக்கு நிலவிய தட்டுப்பாடு மிகவும் மோசமடைந்து விவசாயிகளை அதளபாதாளத்தில் தள்ளியுள்ளதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

## இந்திய-இலங்கை அணிகள் சமபலம் கொண்டவையே



முரளிதரன

இந்திய-இலங்கை அணிகள் துடுப்பாட்டம், பந்துவீச்சில் சமபலத்துடன் உள்ளன. எங்கள் அணியில் ஜெயசூரியா, ஜெயவர்த்தனே,அர்னால்ட் இருப்பதைப்போல இந்திய அணியில் சேவாக் , ராவிட், கைப் இருக்கின்றனர் என்கிறார் சுழல்பந்து வீச்சாளர் முரளிதரன். பந்து வீச்சாளர்களை எடுத்துக்கொண்டால் வாஸ், மஹ்ரூப் போல் நெஹ்ரா,பதான் இருக் கின்றனர். ஆனாலும் முத்தரப்பு ஒரு நாள் தொடரில் நாங்கள் கோப்பை வென்றதற்கு களத்தடுப்புதான் முக்கிய காரணம். எங்கள் வீரர்கள் அற்புதமாக களத்தடுப்புச் செய்தனர். ராவிட் ரன் அவுட் திருப்பு முனையாக அமைந்தது. களத்தடுப்பில் இந்திய அணி பலவீனமாக செயற்பட்டது. முன்னணி களத்தடுப்பாளர்களான கைப்,யுவராஜ் ஆகியோர் கூட ஏமாற்றிவிட்டனர். இனிவரும் தொடர்களிலாவது இந்திய அணி களத்தடுப்பில் கவனம் செலுத்துவது நல்லது என்றார்.

## ஜெயசூரியா, ராவிட் இல்லாவிட்டாலும் ஆசிய–11 பேர் அணி வெற்றி பெறும்



-இன்சமாம் உல்ஹக்

ஆசியா 11 பேர் அணி ஆபிரிக்க 11பேர் அணி இடையேயான ஒரு நாள் கிரிக்கெட் போட்டி தென் ஆபிரிக்காவில் நடக்கிறது. மொத்தம் மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் முதல் போட்டி வரும் 17 ஆம் திகதி பிரிட்டோரியாவிலும், இரண்டாவது போட்டி 20 ஆம் திகதி டர்பன் நகரிலும், மூன்றாவது போட்டி 21 ஆம் திகதி அதே இடத்திலும் நடக்கிறது.

இதில் ஆசிய 11 பேர் அணிக்கு பாகிஸ்தான் தலைவர் இன்சமாம் தலைவராக இருக்கிறார். இந்த அணியில் இடம்பெற்றிருந்த இந்திய வீரர் ராவிட், இலங்கை வீரர் ஜெயசூரியா ஆகியோர் விளையாடவில்லை.

அவர்களுக்கு பதிலாக இலங்கை அணித்தலைவர் அத்தப்பத்து, இலங்கை வீரர் ஜெயவர்த்தனே, வங்காள தேச வீரர் காலித் மசூத் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.


அதுபோல அணியில் இடம்பெற்றிருந்த இர்பான் பதான், சமிந்தவாஸ் ஆகியோர் காயம் காரணமாக விலகிவிட்டனர். அவர்களுக்குப் பதிலாக ஆசிஷ் நெக்ரா,ஜாகீர்கான் சேர்க்கப்பட்டுள்ளனர்.

போட்டியில் பங்கேற்பதற்காக தலைவர் இன்சமாம் கராச்சியில் இருந்து தென் ஆபிரிக்கா புறப்பட்டுச் சென்றார் அப்போது அவர் கூறியதாவது:-

ஜெயசூரியா,ராவிட் போன்ற முன்னணி வீரர்கள் ஆசிய 11 பேர் அணியில் இடம் பெறாவிட்டாலும் எங்கள் அணி வலுவாகவே உள்ளது எங்களால் வெற்றிபெற முடியும்.

சில முன்னணி வீரர்கள் விளையாட்டில் பங்கேற்க முடியாத சூழ்நிலை இருப்பதால் இதை சிறந்த அணி என்று கூற முடியாவிட்டாலும் ஆபிரிக்கா 11 பேர் அணியை வெற்றிகொள்ளும் அளவுக்கு வீரர்கள் இருக்கிறார்கள்.இருந்தாலும் போராடித்தான் வெற்றிபெற முடியும் இவ்வாறு இன்சமாம் கூறினார்.

## முத்தரப்பு இறுதியாட்டத்தில் இந்திய அணி போராடவில்லை



-சனத்

முத்தரப்புத் தொடரில் இந்திய அணியின் ஆட்டம் சுமாராக இருந்தது இது தவறு. இறுதிப் போட்டியில் நான், ஜெயவர்த்தனே, அர்னால்ட் சிறப்பாக ஓட்டம் குவித்தோம். இதனால் இந்திய வீரர்களின் போராட்டம் வெளியில் தெரியாமல் போய்விட்டது என்கிறார் சிறிலங்காவின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஜெயசூரியா.இறுதிப் போட்டியில் சேவாக் ஆட்டம் அருமையாக இருந்தது. தலைவராகப் பதவி ஏற்ற ராவிட் வெற்றிக்காக கடுமையாகப் போராடினார். ஆனாலும் கொழும்பு போன்ற ஆடுகளத்தில் முதலில் துடுப்பாடும் அணிக்கே வெற்றி வாய்ப்பு அதிகம் என்பதை மறுக்கமுடியாது. இதனால் 281 என்ற வலுவான ஓட்டம்பெற்ற எங்களால் கோப்பையைக் கைப்பற்ற முடிந்தது என்றார்.

## சுப்பர் சீரிஸ் கிரிக்கெட்தொடர் அவுஸ்.உத்தேச அணி அறிவிப்பு



சுப்பர் சீரிஸ் கிரிக்கெட் தொடருக்கான அவுஸ்திரேலிய உத்தேச அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா உலக 11பேர் அணிகளுக்கு இடையிலான சுப்பர் சீரிஸ் தொடர் வரும் ஒக்ரோபரில் நடக்கிறது. இதில் மூன்று ஒருநாள் போட்டிகளும், (ஒக் 5,7,9) ஆறுநாள் கொண்டடெஸ்ட்போட்டி(ஒக்14-19 வரை)ஒன்றும் நடக்கிறது. இதற்கான அவுஸ்திரேலிய உத்தேச அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் டெஸ்ட் போட்டிக்கு 25வீரர்களும், ஒருநாள் போட்டிக்கு 27 வீரர்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். தற்போது இங்கிலாந்து சென்றுள்ள அவுஸ்திரேலியஅணி, ஆஷஸ் டெஸ்ட் தொடரில் விளை யாடி வருகிறது. இத்தொடர் முடிந்த பின்னர் இறுதி அணி அறிவிக்கப்படும்.

டெஸ்ட் உத்தேச அணி ரிக்கி பொண்டிங், ஆடம் கில்கிறிஸ்ட், நாதன் பிராக்கன், ஸ்டுவர்ட்கிளார்க், மைக்கேல் கிளார்க், டேனியல் கல்லன், ஜேசன் கிளெஸ்பி, பிராட் ஹடின், ஹைடன், பிராட்ஹொக், மைக்கேல் ஹுசே, பில் ஜாக்ஜ், காஸ்ரோவிச், கேடிச், லாங்கர், பிரட்லீ, ,மைக்கேல், லீவிஸ்,ஸ்டுவர்ட் மெக்கில், மார்ட்டின், கிளன் மெக்ராத், மெத்யூ நிக்கோல்சன், ஆண்ட்ரூ சைமண்டஸ் ,ஷான் டையட், வோர்ன் மற்றும் ஷேன்வட்சன்.

ஒருநாள் உத்தேச அணி ரிக்கி பொண்டிங், ஆடம் கில்கிறிஸ்ட் , நாதன் பிராக்கன், ஸ்டுவார்ட்கிளார்க், மைக் கேல் கிளார்க், டேனியல் கல்லன், ஜேசன் கிளெஸ்பி, பிராட் ஹாடின், நாதன் ஹொரிட்ஸ், ஹைடன், பிராட் ஹாட்ஜ், பிராட் ஹாக் ஜேம்ஸ் ஹோப்ஸ் மைக்கேல் ஹுசே, மிட்செல் ஜான்சன், காஸ்பரோவிச்,கேடிச், பிரட்லீ, மைக்கேல் லீவிஸ்,மார்ட்டின், மெக்ராத் ,மார்கஸ் நார்த், சைமண்ட்ஸ், டையட்,வாட்சன், காமரூன் ஒயிட் மற்றும் டேமியன் ரைட் .

## இந்திய அணியில் பிளவு இல்லை அதிரடி வீரர் சேவாக் சொல்கிறார்



இந்திய கிரிக்கெட் அணியில் பிளவு இல்லை என்று அதிரடி ஆட்டக்காரர் சேவாக் கூறியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் தலைவராக மீண்டும் கங்குலி நியமிக்கப்பட்டார். இது பற்றி அதிரடி ஆட்டக்காரர் வீரேந்தர் சேவாக்கிடம் நிருபர்கள் கருத்துக் கேட்டனர் அவர் கூறியதாவது:-

இதுபற்றி கருத்து தெரிவிப்பது சிறந்ததல்ல. கங்குலியின் கடந்த கால சாதனைகள் மற்றும் அணிக்கு எது நல்லது என்ற அடிப்படையில் அவரை தேர்வாளர்கள் தேர்ந்தெடுத்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். தலைவராக கங்குலியை தேர்வுசெய்ததை நான் சிறந்த முடிவாக கருதுகிறேன்.

கங்குலி இந்திய தலைவர்களில் மிகவும் சிறந்த, வெற்றிகரமான தலைவர் என்ற பெயருக்கு சொந்தக்காரர்.

இந்திய அணியில் எந்தவிதபிரிவும், பிளவும் இல்லை. அணி அதே மாதிரி தான் உள்ளது. தலைவர் மாற்றத்தால் அணியில் பெரிய மாற்றம் எதுவும் நிகழாது.

இவ்வாறு சேவாக் கூறினார்.

## கே.சி.சி.சி கிண்ணத்திற்கான கூடைப்பந்துப் போட்டி

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்டகூடைப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் கே.சி.சி.சி.வெற்றிக்கிண்ணத்திற்காக நடத்தும் கூடைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டி கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியில் நாளை நடைபெறவுள்ள ஆட்டத்தில் பெண்களுக்கான போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பட்டர்பிளை விளையாட்டுக்கழகமும், ஆண்களுக்கான போட்டியில் சென்றலைஸ்ட் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பற்றீசியன் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (கீ)

## கூடைப்பந்து இறுதிப்போட்டியில் உடுவில் வி.க., சென்றலைஸ்ட் சம்பியன்

தமிழீழ மாணவர் அமைப்பு,விளையாட்டுத்துறை ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் யாழ்.மாவட்ட ரீதியில் நடத்திவந்த கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் மின்னொளியில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் மகளிர் பிரிவில் உடுவில் விளையாட்டுக்கழக அணியும், ஆண்கள்பிரிவில் யாழ்ப்பாணம் சென்றலைஸ்ட் அணியும் வெற்றி பெற்று இவ்வாண்டுக்கான கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இந்தப்போட்டியின் இறுதியாட்டத்தில் உடுவில் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விளையாடிய கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகத்தை 49.40 என்ற புள்ளி அடிப்படையில் மிகவும் விறுவிறுப்பான முறையில் நடைபெற்ற ஆட்டத்தின் மூலம் உடுவில் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

ஆடவர் பிரிவு இறுதியாட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகமும், யாழ்ப்பாணம் சென்றலைஸ்ட் விளையாட்டுக்கழகமும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் 72.57 என்ற புள்ளி அடிப்படையில் சென்றலைஸ்ட் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றுள்ளது. (கீ)

## வடக்கு –கிழக்கு மாகாணப்போட்டி நான்கு புதிய சாதனைகள்

விளையாட்டு

வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத்திணைக்களத்தால் மாவட்டங்களுக்கிடையில் நடத்தப்படும் தடகள விளையாட்டுப் போட்டி நேற்று முன்தினம் யாழ். பொதுவிளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகியது. இந்தப் போட்டியில் நான்கு புதிய சாதனைகள் நிகழ்த்தப்பட்டன.

பெண்களுக்கான குண்டெறிதல் போட்டியில் 2004ஆம் ஆண்டு திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த ஏ.வி.சகுரிக்காவால் நிலை நாட்டப்பட்ட 8.93 மீற்றர் தூரத்தை யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த கு.தர்சினி 9.74 மீற்றர் தூரம் எறிந்து சாதனையை முறியடித்தார்.,


பெண்களுக்கான பரிதிவட்டம் வீசுதல் போட்டியில் 2004 ஆம் ஆண்டு திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.ஆர்.சந்திரசிறியால் நிலைநாட்டப்பட்ட 26.67 மீற்றர் தூரத்தை கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சீ.தாரணி 29.30 மீற்றர் தூரம் எறிந்தும், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ரி.அனுஷா 26.86. மீற்றர் தூரம் எறிந்தும் சாதனையை முறியடித்தனர்.

ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் 1998ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். ரமணனால் சாதனையாக் கப்பட்ட7.06 மீற்றர் தூரத்தை திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த ஆர். ரதீஷன் 7.07 மீற்றர் தூரம் பாய்ந்து சாதனையை முறியடித்தார்.

பெண்களுக்கான 100மீற்றர் தடை தாண்டல் போட்டியில் 2002ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வி. சேந்தினியால் நிலைநாட்டப்பட்ட 17.7 செக்கன்கள் என்ற சாதனையை யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.தயாளினி 17.05 செக்கனில் ஓடிமுடித்து சாதனையை நிலைநாட்டினார்.

நேற்று முன்தினம் ஆரம்பளமான இந்தத் தடகள விளையாட்டுப்போட்டியில் எட்டு மாவட்டங்களினதும் 500இற்கு மேற்பட்ட வீரவீராங்கனைகள் பங்குபற்றுவதற்காக வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அவுஸ்திரேலியா வெற்றிபெற 423 ஓட்ட இலக்கு






இங்கிலாந்து-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் ஒல்ட்ராப்பேட்டில் நடைபெற்று வரும் ஆஷஸ் டெஸ்ட் தொடரின் மூன்றாவது போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றிபெற 423 ஓட்ட இலக்கை இங்கிலாந்து நிர்ணயித்துள்ளது. முதல் இனிங்சில் அவுஸ்ரேலியா 302 ஓட்டங்களைப் பெற்றது.

ஷேன்வோன் அதிகபட்சமாக 90 ஓட்டங்களைப்பெற்றார். பந்துவீச்சில் ஜோன்ஸ் ஆறு விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

பதிலளித்து 142 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்சை ஆடிய இங்கிலாந்து நான்காம் நாளான நேற்று ஆறு விக்கெட்டை இழந்து, 280 ஓட்டங்களைப்பெற்று ஆட்டத்தை நிறுத்தியது. துடுப்பாட்டத்தில் ஸ்ரோஸ் 106 ஓட்டங்களையும், இயன்பெல் 65 ஓட்டங்களையும்பெற்றனர்.

பந்துவீச்சில் மைக்ராத் ஐந்து விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இன்றுபோட்டியின் இறுதிநாளாகும் இங்கிலாந்து முதல் இனிங்ஸ் 444 ஓட்டங்கள்.



## சிந்தனைக்கு

தனது தியாகத்தால் இந்த மண்ணுக்கு விடுதலை கிடைக்குமாக இருந்தால், தனது சாவு இந்த விடுதலைப் போராட்டத்தை உந்தி முன் தள்ளுமாக இருந்தால், அந்தச் சாவை அணைத்துக் கொள்ள எமது போராளிகள் போட்டியிடுவர்கள

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 15.08.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## பாதை மறிப்பு ஓர் உடன்பாட்டு மீறல்!

கடந்த சனிக்கிழமை காலை தொடக்கம் நண்பகல் வரையில் ஓமந்தை, முகமாலைச் சோதனைச் சாவடிகளை மூடி மக்களின் போக்குவரத்திற்கு சிறிலங்கா ஆயுதப்படையினர் இடையூறு விளைவித்தமை முற்றிலுமானதொரு யுத்தநிறுத்த மீறல் ஆகும். அதாவது யுத்தநிறுத்த உடன்பாட்டுச் சரத்துக்களின் ஒன்றான 2.10 சரத்து இந்நடவடிக்கை மூலம் மீறப்பட்டுள்ளது.

சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சுட்டுக்கொல்லப்பட்டதைத் தொடர்ந்தே இச்சோதனைச் சாவடிகள் மூடப்பட்டிருத்தல் வேண்டும். ஏனெனில் இச்சோதனைச் சாவடிகள் மூடப்பட்டதற்கான காரணம் எதனையும் சிறிலங்கா ஆயுதப்படைத் தரப்பு இதுவரையில் அறியத் தரவில்லை. ஆனால், காரணம் எதுவாக இருப்பினும் முன்னறிவித்தலின்றி – போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் தெரிவிக்கப்படாது, விடுதலைப்புலிகளுக்கு முன்னறிவித்தல் கொடுக்கப்படாது மேற்கொள்ளப்பட்ட இந்நடவடிக்கை யுத்தநிறுத்த உடன்பாட்டிற்கு மாறானது என்பதில் கேள்விக்கு இடமில்லை.

சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பின் இந்நடவடிக்கை காரணமாக பல ஆயிரக்கணக்கான பயணிகள் பெரும் பாதிப்பிற்குள்ளாகினர். தொழில் மற்றும் வர்த்தகம் தொடர்பாகச் சென்றவர்கள், மாணவர்கள், விமானப் பயணங்களை மேற்கொள்வதற்குச் செல்ல வேண்டியவர்கள் எனப்பல தரப்பினர் பாதிப்பிற்குள்ளாகியுள்ளதோடு பெருமளவு பொருள் நட்டத்திற்கும் உள்ளாகியுள்ளனர்.

இராணுவத்தின் சோதனைச்சாவடியூடாகச் சென்று வருவதற்கு நாட்கணக்கில் மக்கள் காத்துக்கிடக்க வேண்டியிருந்ததும், பெரும் நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டியிருந்ததும் ஒன்றும் தமிழ் மக்களுக்குப் புதியதொன்றல்லத்தான். ஆனால், திடீரென இராணுவம் போட்டதடையானது திடீரென நெருக்கடியை ஏற்படுத்தியது மட்டுமல்ல, அது யுத்தநிறுத்த உடன்பாட்டிற்கு மாறானது என்பதும் இங்கு முக்கியத்துவமானதாகும்.

அதுமட்டுமன்றி யுத்தநிறுத்த உடன்பாடு அமுலுக்கு வந்தபின்னர் இடம்பெறும் முதற் கொலை அல்ல இது. இவ்யுத்த நிறுத்த உடன் பாட்டுக்காலத்தில் விடுதலைப்புலிகள் தரப்பிலும் பலர் கொல் லப்பட்டுள்ளனர். சிறிலங்காஅரச தரப்பிலும் பலர் கொல்லப் பட்டுள்ளனர்.

இதனைத்தவிர கொல்லப்பட்டவர்களில் அரசியல்வாதி, அரசியல் பணியில் ஈடுபட்டவர் என்ற ரீதியிலும் கதிர்காமர்தான் தனியிடம் பெறுகின்றார் என்பதல்ல. விடுதலைப்புலிகள் தரப்பில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் கொல்லப்பட்டவர்களில் நூறு வீதமானவர்களும் அரசியற் பணியில் ஈடுபட்டிருந்தவர்களே.

இந்தவகையில் மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், மட்டக்களப்பு நகர அரசியல்துறைப் பொறுப்பாளர் சேனாதி உட்படப் பல போராளிகள் அரசியல் பணியில் ஈடுபட்டிருந்தபோதே சிறிலங்கா ஆயுதப்படையினராலும், அவர்களின் துணைப்படையாக இயங்கும் இனவிரோதக் குழுக்களினாலும் கொல்லப்பட்டவர்கள் ஆகும்.

ஆனால், அவ்வேளையில் எல்லாம் விடுதலைப்புலிகள் யுத்தநிறுத்த உடன்பாட்டை மீறும் வகையில் பாதையை மூடவோ, போக்குவரத்தைத் தடைசெய்யவோ இல்லை. வேறுவிதமாகக் கூறுவதானால் மக்களின் இயல்பு வாழ்க்கையை பாதிப்படையச் செய்யவில்லை. ஆனால், தற்பொழுது கதிர்காமரின் கொலையைத் தொடர்ந்து ஆயுதப்படைத்தரப்பின் நடவடிக்கைகள் யுத்தநிறுத்த விதிகளை மீறுவதாகவும், மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதிப்புறச் செய்ததாகவும் இருந்தது.

இதேவேளை, சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பும், சிறிலங்கா அரசும் கதிர்காமருடன் கொலை தொடர்பாகக் காட்டும் அக்கறையும், கரிசனையும் கூட அரசியல் நோக்கம் கருதியதே ஒழிய, வெளிவிவகார அமைச்சர் கொல்லப்பட்டுள்ளார் என்பதாலோ தமக்கு விசுவாச மாக இருந்து சேவை செய்த ஒருவர் கொல்லப்பட்டுவிட்டார் என்பதற்காகவோ அல்ல. ஏனெனில் கொல்லப்பட்டவர் தமிழர் என்பதை அவர்கள் எவ்வேளையிலும் மறந்துவிடமாட்டார்கள்.

தற்பொழுது இக்கொலையை அடிப்படையாக வைத்து விடுதலைப்புலிகளுக்கு எதிராகவும், தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்கு எதிராகவும் அரசியல் நடத்தலாம். இனப் பிரச்சினைக்கு இராணுவ ரீதியிலான தீர்வு நோக்கி முன்னேறலாம் என்பதன் அடிப்படையிலேயே சிங்கள ஆட்சியாளர்கள் முயற்சி மேற்கொள்கின்றனர். அவ்வாறு இல்லாதுவிடில் சிங்கள அரசியற் தலைவர்கள் கடந்த காலத்தில் இலங்கையின் சுதந்திரத்திற்காகவும், ஐக்கியத்திற்காகவும் போராடிய பல தமிழ்த் தலைவர்களை மறந்திருக்க மாட்டார்கள். இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண்பதற்கு முனைந்திருக்கமாட்டார்கள்.



மீண்டும் நாட்டில் அவசரகாலச் சட்டம், இராணுவக் கெடுபிடிகள்...

# சனாதிபதி சந்திரிகாவை ஓரம் கட்ட சுதந்திரக் கட்சிக்குள் திட்டம்

(கொழும்பு)

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஆறாம் திகதி நடைபெறவுள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சி மாநாட்டில் கட்சியின் சனாதிபதி வேட்பாளராக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் பெயர் அறிவிக்கப்பட்ட பின்னர் கட்சிக்குள் சனாதிபதி சந்திரிகாவை ஓரங்கட்டும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதமர் ராஜபக்ஷவின் தலைமையிலேயே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கென அமைச்சர் கள் மங்கள சமரவீர, ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளே ஆகியோரின் உதவி பிரதமருக்குக் கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சனாதிபதியை கட்சியில் ஓரங்கட்டிவிட்டு கட்சியின் தலைமைத்துவத்தை பிரதமர் ஏற்றுக்கொள்ளும் இந்தத் திட்டம் குறித்து தற்போது ஆராயப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. செப்ரெம்பர் மாதம் ஆறாம் திகதி கட்சியின் மாநாட்டில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்படும் வரை இந்த விடயம் சம்பந்தமாக மௌனம் சாதிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத்திட்டத்தின் கீழ் கட்சியின் அனைத்து அமைப்பாளர்கள், இளைஞர் அமைப்புகள், மகளிர் அமைப்புக்கள் என்பனவற்றின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதென்றும், கட்சி மாநாட்டின் போது பிரதமரை கட்சியின் உபதலைவராக அறிவிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்திற்கு கட்சிப் பொதுச்செயலாளரின் ஆதரவு முக்கியம் என்பதால் இது குறித்து கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரி பால சிறிசேனவுடன் பேச்சு வார்த்தைகளை மேற்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சனாதிபதியின் இணக்கம் கிடைத்தாலும், இல்லாவிடிலும் ஆறாம் திகதி கட்சி மாநாட்டின் பின்னர் ஜே.வி. பி.யுடன் சனாதிபதித் தேர்தல் சம்பந்தமாக பேச்சு வார்த்தைகளை நடத்தி உடன்பாட்டிற்கு வருவதென்றும் பிரதமர் தலைமை யிலான குழு தீர்மானித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பாதுகாப்பு வழங்க முடியாத அரசு பலியானவர்கள் மீது குற்றம் சாட்டுகிறது !

ஐ.தே.க. சாடுகிறது

(கொழும்பு)

முக்கிய பிரமுகர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்க முடியாத அரசாங்கம் இன்று அந்த முக்கிய பிரமுகர் மீதே குற்றம் சுமத்துவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்ணாண்டோ இது தொடர்பாக கருத்துரையில்; அரசாங்கம் முக்கிய உறுப்பினர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்குவதிலிருந்து தவறியுள்ளது.

இதனை மறைப்பதற்காக தற்சமயம் கொலைசெய்யப்பட்டவரையே குற்றம் சுமத்தும் நிலைப்பாட்டை அரசாங்கம் மேற்கொண்டிருப்பது வருந்தத்தக்கது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை சொந்த வாசஸ்தலத்தில் தங்க வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டபோதும் அவர் அதனை செவிமடுக்கவில்லை என அரசாங்கம் தெரிவித்திருந்தமையையே பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்ணாண்டோ விமர்சனம் செய்துள்ளார். (32)

# திருமலை மின்பொறியியல் நிர்வாகம் மீண்டும் சீ ழக்கு அலுவலகத்துடன் இணைப்பு

மின்சார சபையின் மறுசீரமைப்புச் சட்டத்தின் கீழ் வட மத்திய மாகாண பிரதி பொது முகாமையாளர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டிருந்த திருகோணமலை பிரதேச மின் பொறியியலாளர் அலுவல நிர்வாகம் மீண்டும் கிழக்கு மாகாண பிரதி பொது முகாமையாளர் அலுவலகத்தின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்படுகின்றது. இது இன்று முதல் அமுலுக்கு வருகின்றது. அதே வேளை கிழக்குப் பிராந்திய மின்சார பொது முகாமையாளர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டிருந்த மின்னேரியா பிரதேச மின் பொறியியல்ாளர் அலுவலக நிர்வாகம் வட மத்திய பிரதி பொது முகாமையாளர் அலுவலக நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்படுகின்றது.

பூகோள ரீதியில் கிழக்கு மாகாணத்தின் கீழுள்ள திருகோணமலை மாவட்டத்திற்கான பிரதேச மின் பொறியியலாளர் அலுவலகம் வடமத்திய மாகாணத்துடன் கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் இணைக்கப்பட்டது. இதற்கு திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் எதிர்ப்புத் தெரிவித்திருந்தார். இதுமீண்டும் திருகோணமலைக்கு மாற்றப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தாலும், அது நிறைவேற்றப்படவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் இந்த மாற்றம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (32)

# கதிர்காமரின் மரண வீட்டில் சந்திரிகா -ரணில் சந்திப்பு

சனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க திட்டமிடாத வகையில் எதிர்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்று முன்தினமி ரவு சந்தித்து உரையாடி உள்ளார்.

இரு தலைவர்களும், மரணமான வெளிவிவகார அமைச்சருக்கு தமது அஞ்சலியை செலுத்துவதற்காக அவரது உத்தியோக பூர்வ வாசஸ்தலத்திற்கு சென்ற பொழுதே இந்தச்சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

இந்தச்சந்திப்பின்போது நாட்டின் தற்போதைய பாதுகாப்பு மற்றும் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரது மரணத்தை அடுத்து ஏற்பட்டுள்ள தற்போதைய நிலை குறித்து ஆராய்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# மேல் கொத்மலைத்திட்டம் ஒத்திவைப்பு; உண்ணாவிரதப் போராட்டம் முடிவு



(கொழும்பு)

மலையகம் தலவாக்கலையில் ஆறு இளைஞர்கள் மேற்கொண்டு வந்த சாகும் வரையிலான உண்ணா விரதப்போராட்டம் முடிவுக்கு வந்திருக்கிறது. மேல் கொத்மலை தண்ணீர் மறிப்பு திட்டம் கைவிடப்படவேண்டும் எனக்கோரி மலையக இளைஞர் மன்றத்தை சேர்ந்த டி.சுதாகரன், எஸ். பத்மநாதன், பி.சங்கர் , ஆர். பாஸ்கர், எஸ். சில்வஸ்வர், எஸ். ராஜா ஆகியோர் கடந்த நான்கு நாட்களாக சாகும் வரையிலான உண்ணா விரதப் போராட்டத்தை மேற்கொண்டு வந்தனர்.

மலையகத்தை பொறுத்த வரை இந்தப்போராட்டம் மிகவும் முக்கியம் வாய்ந்த போராட்டமாக கருதப்பட்ட அதே நேரம் மேல் கொத்மலை எதிர்ப்பு உணர்வில் இறுதி அஹிம்சை போராட்டமாகவும் கருதப்பட்டது.

இந்த நிலையில் அரசாங்கம் உடனடியாக இந்தத்திட்டத்தை ஆரம்பிக்கப்போவதில்லை எனத் தெரிவித்த உறுதி மொழியை அடுத்து உண்ணா விரதப்போராட்டம் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பொ. சந்திரசேகரன் தெரிவித்தார். (முன்னர்வந்த செய்தி உள்ளே.) (32)

## கதிர்காமரின் கொலைக்கு விடுதலைப்புலிகளே காரணம்

*–சனாதிபதி சந்திரிகா கூறுகிறார்*

வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன்கதிர்காமர் கொலை செய்யப்பட்டதிற்கு விடுதலைப்புலிகளே காரணம் என சனாதிபதி தெரிவித்துள்ளார்.

நாட்டுமக்களுக்கு தேசிய தொலைக்காட்சி மூலம் உரையாற்றிய அவர் பயங்கரவாதத்திற்கு ஒரு போதும் அடிபணியப் போவதில்லை எனவும் பாதுகாப்பை பலப்படுத்துவதன் மூலம் மாத்திரம் இவ்வாறான கொலை களை தடுக்க முடியும் எனவும் தான் நம்பவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

சமாதான முன்னெடுப்புக்களை கொண்டு செல்வதன் மூலமாகவே இதனைத் தடுக்கமுடியுமெனவும் தெரிவித்துள்ளார்.

தமது கட்சி அதிகார பரவலாக்கத்தின் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண தொடர்ந்தும் உறுதி கொண்டுள்ளதாக தெரிவித்த அவர் இதற்கு சர்வதேசமும் நாட்டுமக்களும் ஒத்துழைப்புத் தரவேண்டுமெனவும் கேட்டுக் கொண்டுள்ளார். (32)

## இராணுவப் பாதுகாப்புடன் சென்று நல்லூரைப் படம்பிடித்த வெளிநாட்டுப் பெண்மணி

(நல்லூர்)

நல்லூர்உற்சவம் இடம் பெற்றுக் கொண்டிருந்த வேளையில் இராணுவத்தினரின் பாதுகாப்புடன் ஆலய வீதிக்கு வந்து ஆலயச் சுற்றாடலை வெளிநாட்டுப் பெண்மணி ஒருவர் படமெடுத்துச் சென்றுள்ளார் இராணுவத்தினருக்குப் பயிற்சி அளிக்க வந்த வெளிநாட்டவர்களாக இவர்கள் இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்து மக்களின் முக்கிய ஆலயமான நல்லூர் உற்சவத்தில் கலந்துகொள்ளும் பொது மக்களையும், ஆலய சுற்றாடலையும் இவர்கள் புகைப்படம் எடுத்துச் சென்றுள்ளனர்.

அதிலும் ஏற்கனவே அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டு ஒரு நாள் கூட முடிவடையாத நிலையில் இராணுவத்தினருடன் வந்து படம் எடுத்துச் சென்றுள்ளமை மக்கள் மத்தியில் பல்வேறு சந்தேகங்களையும் ஏற்படுத்தியுள்ளது. (41)

## கதிர்காமரின் இறுதி நிகழ்வில் இந்திய வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் இறுதி நிகழ்வில் கலந்துகொள்வதற்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங், பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் இன்று சிறிலங்காவிற்கு வரவுள்ளனர்.

இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சியாம் சரண் உட்பட பல முக்கியஸ்தர்களும் அமைச்சர்களுடன் வருகின்றனர்.

கதிர்காமரின் இறுதி நிகழ்வுகள் இன்று நடைபெறவுள்ளதால் இவர்கள் இன்று காலை இந்தியாவிலிருந்து புறப்படுவர் என்று வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

## சனாதிபதித்தேர்தலில் தனிவேட்பாளர் ஜே.வி.பி தீர்மானத்தில் மாற்றமில்லை

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் பிறிதொரு வேட்பாளரை நிறுத்துவது பற்றி ஜே.வி.பி தற்போது எடுத்திருக்கும் தீர்மானத்தில் எதுவித மாற்றமும் இல்லையென அக்கட்சி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சனாதிபதி வேட்பாளராக ஏனைய கட்சிகளினால் நியமிக்கப்பட்டிருக்கும் வேட்பாளர்களின் கொள்கைகள் தெளிவாக இல்லாமையே அதற்குக்காரணம் என அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் யாரென பார்க்காது கொள்கைகளுக்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜே.வி.பி தீர்மானித்துள்ளது.

கடந்த வாரம் நடைபெற்ற கட்சியின் அரசியல்பீடக் கூட்டத்தின் போதும் இது குறித்துப்பேசப்பட்டுள்ளது. அதற்கமைய தனியாக வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதென முன்னர் எடுத்த தீர்மானத்தில் எதுவித மாற்றங்களும் இல்லை எனக்கூறப்படுகிறது. சனாதிபதித் தேர்தல் எப்போது நடைபெறும் என அறிவிக்கப்பட்ட பின்னர் தங்களின் வேட்பாளர் யாரென அறிவிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அந்தக்கட்சி தெரிவித்துள்ளது.

## புலிகளின் பகுதிக்கான போக்குவரத்து திருமலையில் படையினரால் தடுப்பு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசங்களுக்கான மக்களின் போக்குவரத்தையும், வாகனப் போக்குவரத்தையும் கட்டைபறிச்சான், மஹிந்தபுர ஆகிய இடங்களில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் தொடர்ந்தும் தடுத்து வருவதாக முறையிடப்பட்டுள்ளது. நேற்று மாலைக்குப்பின்னரும் இத் தடை இருந்துவருவதாக அப்பகுதி மக்கள் முறையிட்டதை அடுத்து திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம் உடனடியாக இராணுவத்தின் திருகோணமலை மாவட்டகட்டளைத் தளபதியுடன் தொடர்பு கொண்டார்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கிழக்குப்பிரதேச மக்கள் கட்டைபறிச்சான் இராணுவமுகாம் ஊடாகவும், ஈச்சிலம்பற்றுப்பிரதேச மக்கள் மகிந்தபுர இராணுவ முகாம் ஊடாகவும் இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு வந்து செல்ல வேண்டும். மற்றும் இருதயபுரம், தோப்பூர் பிரதேசங்களில் உள்ள வழிகள் ஊடாகவும் இம் மக்கள் வந்து செல்லவேண்டும்.

அமைச்சர் கதிர்காமரின் கொலையை அடுத்து இவ்வழிகள் ஊடாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு மக்கள் செல்வதும் அப்பகுதிகளிலிருந்து இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வருவதும் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை தொடக்கம் படையினரால் தடைசெய்யப்பட்டது.

வன்னி,மட்டக்களப்பு பகுதிகளில் விடுதலைப்புலிகளின் பகுதிகளுக்கு சென்று திரும்புவதற்கு விதிக்கப்பட்ட தடையை இராணுவத்தினர் சனிக்கிழமை நண்பகலுடன் நீக்கி விட்டதாக அறிவிக்கப்பட்டும் திருமலை மாவட்டத்தில் ஏன் இத்தடை தொடர்கிறது என்று பாராளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம், இராணுவத்தின் திருகோணமலை மாவட்டகட்டளைத் தளபதியை வினாவினார்.

திருமலை மாவட்டத்திலும் அத் தடை நீக்கப்பட்டு விட்டதாகவும் எனினும் புதியவர்கள் விடுதலைப் புலிகளின் பகுதிக்குச்செல்வதும் அங்கிருந்து திரும்புவதற்கும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருப்பதாகவும் மாவட்ட இராணுவக்கட்டளைத் தளபதி தமக்கு தெரியப்படுத்தியதாக துரை ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

வாகனப்பேருந்து போக்குவரத்தும் இப்பகுதிகளுக்கு தொடர்ந்து தடுக்கப்பட்டு வருவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் இராணுவ அதிகாரியிடம் கூறினார் இதனால் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து நோயாளிகளை அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு கொண்டு வரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் துரை ரட்ணசிங்கம் இராணுவ மாவட்ட கட்டளைத் தளபதிக்குத் தெரியப் படுத்தயதுடன், உடனடியாக தடையை நீக்க நடவடிக்கை எடுக்கும் படியும் சனாதிபதிக்கு ஞாயிறு மாலை பக்ஸ் மூலம் அவசர வேண்டுகோள் ஒன்றை அனுப்பிவைத்தார். (25)

### மக்கள்...

தமக்கு அவதூறை ஏற்படுத்துவதற்காக படையினரால் மேற்கொள்ளப்பட்ட செயல் என்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம் தெரிவித்தார்.

இதேவேளை ஓமந்தை பகுதிக்கு சென்று படையினருடன் பேச்சு நடத்திய வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிசோர் தகவல் அளிக்கையில் உயரதிகாரிகளின் உத்தரவில்லாமல் படையினர் தம்மிச்சையாகவே இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக குற்றம் சுமத்தினார். இதேவேளை வவுனியாவில் இருந்து வன்னிக்குச் செல்ல நேற்று போராளிகளுக்குப் படையினர் அனுமதி மறுத்துள்ளனர்.

நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் வவுனியாவில் இருந்து வன்னிக்குச் செல்வதற்காக ஓமந்தை இராணுவச் சோதனை நிலையத்திற்குச் சென்ற வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம் தலைமையிலான அரசியல் பணிப்போராளிகளை தடுத்து நிறுத்திய படையினர் ஓமந்தை சோதனை நிலையம் ஊடாகப் போராளிகளை செல்ல அனுமதிக்க வேண்டாம் என இராணுவ தலைமையகத்திலிருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அவ்வுத்தரவிற்கமைய போராளிகள் வன்னிக்குச் செல்ல தாம் அனுமதிக்க முடியாது எனவும் தெரிவித்து அவர்களை வவுனியாவிற்குத் திருப்பியனுப்பியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வவுனியா மாவட்டதலைவர் ஜோனியிடம கடும்முறைப்பாடுஒன்றைச் செய்திருந்தார். இதனை அடுத்து கண்காணிப்புக்குழுப் பிரதிநிதி இராணுவ உயரதிகாரிகளுடன் தொடர்புகொண்டு போராளிகளின் பயணத்திற்கு அனுமதி அளிக்குமாறு கேட்டபோதும் படையினர் அதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளனர்.(10,32)

### கதிர்காமரின்...

பிரச்சினை சென்றுவிட்டதனால் அனைவரும் இணைந்து நின்று இந்தப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமென அவர் மேலும் கூறினார்.

இதேவேளை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையில் சம்பந்தப்பட்டோரைக் கைது செய்யும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுவதாக தயாரட்ணாயக்க தெரிவித்துள்ளார். இதனடிப்படையில் நேற்றும் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இன்றும் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. எனினும் இதன்போது பொதுமக்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பொதுமக்கள் தமது அடையாள அட்டைகளை தம்முடன் எடுத்துச்செல்வது சிறந்தது என்றும் அவர் தெரிவித்தார். (32)

### அரசியல்துறை...

கண்காணிப்புக்குழு பிரதிநிதிகளும், உயர் பொலிஸ் அதிகாரிகளும் சென்று பார்வையிட்டுள்ளனர்.

நேற்று நண்பகல் இந்த அலுவலகம் மீது இனந்தெரியாதோரால் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து அந்த அலுவலகத்திற்குச் சென்று சேத விபரங்களைக் கண்காணிப்புக் குழுவினர் பொலிஸ் உயரதிகாரிகள் பார்வையிட்டுள்ளனர். (32)

### நல்லூர்...

ஆலய வீதிக்கு வாகனங்களையும் கொண்டு செல்ல வேண்டும் எனக் கூறி தொண்டர்களுடன் முரண்படுவதும் அதனைத் தொடர்ந்து மக்கள் அங்கு கூடுவதும், பிரச்சினைகளை வளர்ப்பதும் என்ற நிலைமையை ஏற்படுத்தும் செயற்பாடுகளில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

இந்த வகையில் நல்லூர்க்கந்தன் உற்சவத்தின் மூன்றாம் நாள் உற்சவத்தின் போது ஆலயத்தில் பூசைகள் இடம்பெற்றுக்கொண்டிருந்தவேளையில் இராணுவத்தினர் ஆயுதங்களுடன் ஆலய வீதிக்கு வாகனத்தில் சென்றதினால் பெரும் அசௌகரியங்களைப் பொது மக்கள் அடைந்ததுடன், பதற்றத்தையும் மக்கள் மத்தியில் இராணுவத்தினரின் நடவடிக்கைகள் ஏற்படுத்தியுள்ளது. (41)

### புலிகள்...

பட்ட தொடர்ச்சியான கைக்கண்டு வீச்சுச் சம்பவம் குறித்து கருத்து வெளியிடும் போதே இளந்திரையன் இவ்வாறு தெரிவித்தார். விடுதலைப் புலிகளைப் போருக்கு இழுக்கும் முயற்சியாகவே சிறிலங்காப் படையினர் தமது ஆதரவாளர்களைக் கொண்டு இவ்வாறான தக்குதலை நடத்தி வருவதாகத் தெரிவித்த இளந்திரையன் இவ்வாறு தாக்குதல்கள் நடத்துபவர்களுக்கு சிறிலங்காப் படையினரும் முதலிடம் கொடுத்து வருகிறார்கள் என்றும் தெரிவித்தார்.

### போராளியொருவர்...

பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக விடுதலைப் புலிகள் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

கபீந்திரன் (வயது-24), கோபால கிருஷ்ணன் (வயது-19), சுதாகரன் (வயது-18), தேவதாஸ்(வயது-17) ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளதாகவும், இவர்கள் தற்போது சிறிலங்காப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் சம்மாந்துறை பொலிசார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகத்தின்பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்று சிறிலங்காப் பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.